விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL
CALL:- 222 5908 / 222 8812

# வலம்புரி

...பதின்னான்கு — Valampurii —

...ளுவர் ஆண்டு 2040 மாசி 17 ஞாயிற்றுக்கிழமை (01.03.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 072

## ஆயுதங்களை கீழே போடாவிட்டாலும்

# ...லிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பை ...லங்கை அரசு ஏற்க வேண்டும்

## ...ணாப் முகர்ஜி இடித்துரைப்பு



(புதுடில்லி)

போர் நிறுத்தம் செய்யத் தயாராக இருப்பதாக விடுதலைப்புலிகள் விடுத்துள்ள அறிவிப்பைப் ...யன்படுத்தி இலங்கை அரசு போரை நிறுத்த வேண்டுமென்றும் போர்ப் பகுதியில் சிக்கியிருக்கும் பொதுமக்களை பாதுகாப்பான இடங்களிற்கு மீட்டுக்கொண்டுவர நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி வலியுறுத்தியுள்ளார். (14ஆம் பக்கம் பார்க்க)

## தொடரும் எறிகணைத் தாக்குதல் 24 மணிநேரத்தில் 73 பேர் பலி

(முல்லைத்தீவு)

வன்னியில் இடம்பெற்ற எறிகணைத் தாக்குதல்களில் 24 மணிநேரத்தில் 73 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 126 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

புதுக்குடியிருப்பு, மாத்தளன் மற்றும் அம்பலவன்பொக்கணை ஆகிய பகுதிகளில் நேற்றுமுன்தினம் இரவு முதல் நேற்று மாலை வரை இடம்பெற்ற எறிகணைத் தாக்குதல்களில் 73 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் 126 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

'எனினும் கொல்லப்பட்டவர், காயமடைந்தவர்களின் பெயர் விபரங்கள் எதுவும் கிடைக்கப் பெறவில்லை. (ந-5)

## ...தொடர்பு நிலையம் ...ல் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

...பு பகுதியிலிருந்த புலிக... ...தொலைத்தொடர்பு நிலைய... ...க்கப்பட்டுள்ளதாக தேசிய ...ஊடக மத்திய நிலையம் ...

...குடியிருப்பின் மேற்குப் பகுதியை ...முன் நகர்வில் ஈடுபட்டுள்ள 58-...படையணி (14ஆம் பக்கம் பார்க்க)

## பட்டினிச் சாவும் வன்னியில் தாண்டவம்

### 4 நாட்களில் 18 பேர் பலி

(முல்லைத்தீவு)

வன்னியில் அரச படையினர் தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் நில ஆக்கிரமிப்பு படையெடுப்பு காரணமாகவும், உலகத் தொண்டு நிறுவனங்களின் உதவிகள் எதுவும் கிடைக்காத காரணத்தினாலும் ஏற்பட்டுள்ள பட்டினி அவலத்தினால் கடந்த 4 நாட்களில் 10 சிறுவர்கள் உட்பட 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

தொடர்ச்சியான உணவின்மை காரணமாகவும் நீரிழப்பு காரணமாகவும் காய்ச்சல் போன்ற நோய்களுக்கு தாக்குப் பிடிக்க முடியாமல் நோய் எதிர்ப்புத் தன்மையை இழந்துவிட்டதனாலும் இவர்கள் உயிரிழந்திருக்கின்றனர் என மருத்துவ(14ஆம் பக்கம் பார்க்க)

## ...னகரத்தினம் எம்.பியின் ...சயலர் கடத்தப்பட்டார்

(வவுனியா)

...த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளு... ...றுப்பினர் சதாசிவம் கனகரத்தினத் ...யலர் நேற்று பிற்பகல் 3.30 மணிய... ...வவுனியாவில் உள்ள அவரது வீட்டில் ...10 பேர் கொண்ட ஆயுதக் குழுவினரால் வெள்ளை வானில் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

இவ்வாறு கடத்தப்பட்டவர் வைரவப் புளியங்குளத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான செல்லத்துரை சபாநாதன் (வயது 50) (14ஆம் பக்கம் பார்க்க)

## தென் பகுதியில் எந்நேரமும் புலிகள் தாக்குதல் நடத்தலாம்

### ஊடகத்துறை அமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளிடம் எஞ்சியிருக்கும் பகுதிகளையும் மீட்பதற்கு இராணுவத்தினர் நடவடிக்கை எடுத்திருப்பதால் தென் பகுதியிலுள்ள மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டுமென அரசாங்கம் எச்சரித்துள்ளது.

தென்பகுதியில் வதந்திகளைப் பரப்பி பயங்கரவாதத் (14ஆம் பக்கம் பார்க்க)

## ...ஆயிரக்கணக்கான மக்கள் ஆபத்தில் ...ஐ.நா.பாதுகாப்புச் சபையில் ஹோம்ஸ்



(கொழும்பு)

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கப் படைகளுக்கும் இடையிலான மோதல்களுக்கிடையில் சிக்குண்டு ஆயிரக்கணக்கான மக்கள் ஆபத்திலிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

அரசாங்கத்தின் தகவல்களின்படி 70 ஆயிரம் பேர் மோதல்கள் நடைபெறும் பகுதிகளில் சிக்குண்டுள்ளனர். ஐ.நா. தகவல்களின்படி 2 இலட்சம் பேர் அங்குள்ளனர்.

தமிழ்க் குழுக்களின் தகவல்களின்படி அங்கு 3 இலட்சம் பேர் சிக்குண்டுள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபையின் மனிதநேய(14ஆம் பக்கம் பார்க்க)

சிறுவர்களை மீட்போம்
சிறுவர் ஆட்சேர்ப்பை நிறுத்து

போருக்கு சிறுவர்களை ஆட்சேர்ப்பது இலங்கை மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு முரணானது. இந்தப் பிரச்சனையில் இலங்கை அரசாங்கம் பூரண எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது.

புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதி செயலகம் — unicef

Call 110

அவசர அம்புலன்ஸ் சேவைக்கு

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால், பயிற்சி பெற்ற சுகாதாரப் பணியாளர்களைக் கொண்டு இச்சேவை வழங்கப்படுகிறது.

அழையுங்கள் 110



Trauma Secretariat — UMCOR — USAID — MEDICAL TEAMS INTERNATIONAL — World Health Organization Sri Lanka

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அரசு-புலிகளுக்கிடையில் சிக்கிய பொதுமக்கள் பேரவலத்தில் உள்ளனர்

## பாதுகாப்புச் சபையில் அறிக்கை சமர்ப்பிப்பு

இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்டு திரும்பியுள்ள ஐக்கிய நாடுகளின் மனிதாபிமானத்துறை பிரதிச் செயலாளர் ஜோன் ஹோம்ஸ் நேற்று தமது விஜயம் தொடர்பாக ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையில் அறிக்கையை சமர்ப்பித்துள்ளார். இதன் போது அவர் இலங்கையில் தாம் கவனித்த விடயங்களை குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள அதுவும் இந்த வருட ஆரம்பம் முதல் ஏற்பட்டுள்ள நிலைமை பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

அரசாங்கப் படைகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதேசத்தின் மீது தாக்குதல்களை நடத்த ஆரம்பித்த பின்னர் பொதுமக்கள் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைந்து இடம் பெயர்ந்தனர்.

இந்த நிலையில் அவர்கள் தற்போதும் வன்னியில் சிக்குண்டுள்ளனர். அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள சுமார் 14 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பில் அவர்கள் தற்போது தங்கியுள்ளனர். அத்துடன் படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போரில் அவர்கள் பாரிய அச்சுறுத்தலை எதிர்நோக்கி வருகின்றனர்.

அங்கிருந்து அவர்களை வெளியேறுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தடுத்து வருவதற்கான உறுதியான தகவல்கள் கிடைத்துள்ளது. அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட பாதுகாப்பு வலயத்தில் 70ஆயிரம் மக்களே உள்ளதாக அரசாங்கம் கூறுகிறது. எனினும் ஐக்கிய நாடுகள் சபையும் ஏனைய தமிழ் தரப்புகளும் வன்னியில் 2 இலட்சம் முதல் 3 இலட்சம் வரையிலான மக்கள் சிக்குண்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இடம்பெறும் யுத்தத்தினால் அதிகம் பொதுமக்களே அங்கு பாதிக்கப்படுவதாக நம்பப்படுகிறது. எனினும் தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் ஊடகங்கள் அங்கு செயற்படாமை காரணமாக உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களை பெறமுடியவில்லை.

நாள் ஒன்றுக்கு குறைந்தது பல பொதுமக்கள் கொல்லப்படுகின்றனர். பலர் காயமடைகின்றனர் என தாம் நம்புவதாக ஹோம்ஸ் குறிப்பிட்டார்.

சண்டை ஆரம்பமான பின்னர் இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் உலக உணவுத் திட்டத்தின் சேவைகள் தடைப்பட்டமையால் அரசாங்க அதிபரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமுமே சிக்குண்டுள்ள மக்களுக்கான உணவு விநியோகங்களை மேற்கொண்டு வருகின்றன. அங்கு கழிப்பறைகளும் சுகாதார வசதிகளும் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன.

எனது விஜயத்தின்போது ஜனாதிபதி மற்றும் முக்கியமான தமிழ்க் கட்சி ஒன்றின் தலைவர் ஆகியோரை சந்தித்தேன். இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடினேன்.

வவுனியாவில் போர் நடைபெறும் இடத் தில் இருந்து தப்பி வந்த சுமார் 30 ஆயிரம் மக்கள் தங்கியுள்ள இடத்திற்கு விஜயம் செய்தேன். மெனிக் பாம் நலன்புரி முகாமில் தங்கியுள்ள மக்களுக்கு குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள், சுகாதாரம் என்பன நீண்டகால வாழ்க்கைக்கு சாத்தியமாகாது என்ற குற்றச்சாட்டு தெரிவிக்கப்படுகிறது.

இந்த முகாம்களுக்கு ஐக்கிய நாடுகள் மற்றும் தன்னார்வு நிறுவனங்களின் செயற்பாடுகள் குறைந்தளவிலேயே காணப்படுகின்றன. அத்துடன் இங்கு தங்கியுள்ள மக்கள் வெளியேற ஏற்றுக்கொள்ளமுடியாத கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் வன்னியில் உள்ள மக்களின் பாதுகாப்பு குறித்து இரண்டு தரப்பும் சர்வதேச நியதிகளுக்கு அமைய நடந்துகொள்ளவேண்டும் என கோரியுள்ளேன்.

மக்கள் வன்னியில் இருந்து வெளியேறும்போது தமிழீழ விடுதலைப் புலிகள் அவர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த நிலையில் தாம் இலங்கை அரசாங்கத்திடம் வன்னியில் இருந்து வெளியேறும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என கேட்டுள்ளேன்.



பொதுமக்கள் சிக்குண்டுள்ள பகுதிகளை நோக்கி ஆபத்தான ஆயுதங்களை பயன்படுத்துவதில்லை என அரசாங்கம் தம்மிடம் உறுதியளித்துள்ளது.

அரசாங்கம் வன்னியில் சிக்குண்டுள்ள மக்களுக்காக அண்மையில் 40 தொன் உணவுகளையும் பின்னர் 10 தொன் உணவுகளையும் அனுப்பியுள்ளது. எனினும் இது அங்குள்ள மக்களின் தேவைகளை [illegible]த்தி செய்யாது.

இடம்பெயர்ந்து வருபவர்களுக்கு [illegible]லும் 400 ஏக்கர் நிலத்தில் தற்கால[illegible]ருப்பிடங்கள் ஒதுக்கப்படவுள்ளதாக அர[illegible]ங்கம் அறிவித்துள்ளது. தற்போது 25 ஏக்கர் நிலப்பரப்பிலேயே 25 ஆயிரம் பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

வன்னியில் இருந்து வெளியேறுவோரை கண்காணிப்பதற்காக ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தினரை (UNHCR) அனுமதிப்பது என அரசாங்கம் தம்மிடம் உறுதியளித்துள்ளது. இடம்பெயர்ந்த நலன்புரி முகாமில் தங்கி[illegible]ள்ளவர்களில் 60 வயதுக்கும் மேற்பட்ட[illegible]ரை சுதந்திரமாக நடமாடுவதற்கும் விடுவதாக அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

இதேவேளை யுத்தம் முடிபடையும் நிலையில் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணப்படவேண்டும் என தாம் வலியுறுத்தியுள்ளதாகவும் ஹோம்ஸ் குறிப்பிட்டார். ([illegible]-5)

## 300 சமுர்த்தி உத்தியோகத்தர்கள் வடக்கு-கிழக்கில் நியமிக்கப்படுவர்

### சமுர்த்தி அதிகார சபை தகவல்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்திலும் வடக்கில் மீட்கப்பட்ட பகுதிகளிலும் அபிவிருத்திப் பணிகளை துரிதப்படுத்துவதற்காக தமிழ்ப் பேசும் 300 சமுர்த்தி உத்தியோகத்தர்களை புதிதாக நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக சமுர்த்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அந்தந்தப் பகுதிகளில் இருந்து இதற்காக விண்ணப்பம் கோரவுள்ளதாக சமுர்த்தி அதிகாரசபை பணிப்பாளர் நாயகம் ஆர்.பி.பி.திலகசிறி தெரிவித்தார். வடக்கில் மீட்கப்பட்ட பகுதிகளை துரிதமாக அபிவிருத்தி செய்து அங்கு சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதோடு இந்த நடவடிக்கைக்கு உதவும் வகையில் அங்கு சமுர்த்தி உத்தியோகத்தர்களை நியமிக்க உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கிழக்கிலும் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுத்துள்ளதோடு இது தொடர்பாக திறைசேரியுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

மீட்கப்பட்ட பகுதிகளில் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் போது கிராம உத்தியோகத்தர்களுக்கு பல முக்கிய பொறுப்புக்கள் வழங்கப்படவுள்ளதாகவும் பணிப்பாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டார்.

(ந-5)

## ஜனாதிபதி அடுத்த வாரம் நேபாளத்துக்கு விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அடுத்த வாரம் நேபாளத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த உத்தியோகபூர்வ விஜயத்தின்போது இரு நாடுகளுக்குமிடையிலான இரு தரப்பு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதியின் நேபாள விஜயம் குறித்து ஆராயும் நோக்கில் இலங்கைக்கு வருகை தந்துள்ள அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் உபேந்திர யாதேவ் நேற்று முன்தினம் ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற இச்சந்திப்பின்போது வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகமவும் கலந்து கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ந-5)

## அமைச்சர் பிரணாப்புக்கு எதிராகக் கறுப்புக் கொடி

### வைகோ உட்பட 150 பேர் கைது

(சென்னை)

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கறுப்புக் கொடி போராட்டம் நடத்த முயன்ற ம.தி.மு.க.பொது செயலாளர் வைகோ மற்றும் அவரது கட்சியை சேர்ந்த 2எம்.எல்.ஏக்கள் உட்பட சுமார் 150 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி கலந்து கொண்டு அடிக்கல் நாட்டுகின்றார். இந்த விழாவில் பங்கேற்க பிரணாப் முகர்ஜி தனி விமான மூலம் மதுரைக்கு வந்தார். அங்கிருந்து தூத்துக்குடி சென்றார்.

தூத்துக்குடியில் அமைக்கப்படவுள்ள அனல் மின் நிலையத்திற்கு அடிக்கல் நாட்டுவதற்காக அமைச்சர் பிரணாப் முகர்ஜி வந்தபோதே இந்தக் கறுப்புக்கொடி காட்டும் போராட்டம் இடம் பெற்றுள்ளது. இவ் ஆர்ப்பாட்டத்தில் பிரணாப் முகர்ஜியின் உருவப்படத்தினை செருப்பாலும் துடைப்பத்தாலும் அடித்து நெருப்பில் எரித்தனர். பின்பு ஊர்வலமாக செல்ல முயன்ற அனைவரும் வி.வி.டி. சிக்னல் அருகில் காவல்துறையால் தடுக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர். (ந-5)

## சிகிச்சை பெற்ற தாயும் 2 பிள்ளைகளும் காணாமல் போயுள்ளனர்

(மன்னார்)

வன்னி பகுதியில் இருந்து காயமுற்ற நிலையில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்குக் கொண்டுவரப்பட்டு பின்னர் மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளிகளில் தாய் ஒருவரும் அவரது இரண்டு பிள்ளைகளும் நேற்று முன்தினம் மதியம் முதல் காணாமல் போயுள்ளனர்.

கிளிநொச்சியைச் சேர்ந்த சகுந்தலா என்பவரும் அவருடைய மகனும் மகளும் காணாமல் போயுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து இராணுவத்தினரும் பொலிஸாரும் தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.

(ந-5)


**House For Sale**

4 Roomed house with an annexed unit and with a garden close to Secretariat on Kandy road for immediate sale.

Inspection & offers by appointment.

Tel. phone No. 0777162581

(2289)

**Wanted**

1). MO/RMO for full/ Part time Duties
2). Nursing Officers
3). Trainee Nurses (GCE A/L)

Apply giving full Bio data

Medical Director,
Central Nursing Home (Pvt.) Ltd.,
350, Palaly Road, Thirunelvely, Jaffna.

(2290)

## ஆலய கட்டட வேலைகள் ஆரம்பம்

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை கிழக்கு அருள்மிகு ஆதி வைரவர் ஆலய கட்டட வேலைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந் தாவால் வழங்கப்பட்ட நிதி உதவியைக் கொண்டு ஆரம்பிக்கப்படடுள்ளதாக ஆலய நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

இவ் ஆலயத்தின் திருவிழா எதிர்வரும் மே மாதம் வருவது குறிப்பிடத்தக்கது. (ஓ-72)

## தீவக மக்களுக்கு பொது நிறுவனங்களின் உதவி

தீவகத்தில் பல உதவும் நிறுவனங்கள் வந்து வறுமைக் கோட்டிலுள்ள மக்களுக்கு உதவி வழங்கி வருகின்றன. யாழ் செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் தீவக லயன்ஸ் கழகம், கியூ டெக் நிறுவனம் ஆகியன உதவிகள் வழங்கி வருகின்றன. இதனால் தீவக மக்கள் மகிழ்ச்சி யடைந்துள்ளனர். (ஓ-72)



கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் நடைபெற்ற மதிப்பளித்தல் விழாவின் போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார், சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட நெல்லயடி இலங்கை வங்கி நிறைவேற்று அதிகாரி எஸ். சிறீகாந்தன் கரவெட்டி கோட்ட கல்வி அதிகாரி க. அம்பலவாணர் ஆகியோர் வித்தியாலய அதிபர் இ. இராகவன் தலைமையில் அழைத்து வரப்படுவதைப் படத்தில் காண லாம். (படம் : வடமராட்சி நிருபர்)

## கணித பாட மதிப்பீடு

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை களில் தரம் 6, 9, 11 மாணவர் களுக்கான கணிதபாட மதிப்பீடு மார்ச் மாதம் 6 ஆம் திகதி சகல பாடசா லைகளிலும் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேம காந் தன் அறிவித்துள் ளார். (ஓ-29)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 110-120 |
| பச்சைமிளகாய் | 70 | 80 |
| தக்காளி | 60 | 60 |
| அவரை | 30 | -- |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 70 |
| கோவா | 40 | 40 |
| கரட் | 50 | 50 |
| பூசணி | 20 | 30 |
| புடோல் | 20 | 30 |
| வாழைக்காய் | 70 | 120 |
| சின்ன வெங்காயம் | 25 | 25-30 |
| பெரிய வெங்காயம் | 40 | 60-80 |
| பாகற்காய் | 40 | 50 |
| வெண்டிக்காய் | 20 | 30 |
| கரணைக் கிழங்கு | 20 | 40 |
| பயிற்றங்காய் | 20 | 35 |
| லீக்ஸ் | 100 | 120 |
| போஞ்சி | 15 | 20 |
| கீரை - 1 பிடி | 10 | 10 |
| தேசிக்காய் | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 40 |

## குடாநாட்டில் சேதமடைந்த வீதிகளை முழுமையாக புனரமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் நிஷா புயலினாலும் மழை வெள்ளத்தினாலும் மோச மாகப் பாதிக்கப்பட்ட வீதி களைப் புனரமைப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு 3 ரோலர் வாக னங்களும் மற்றும் தார் பரல்களும் கொழும் பிலிருந்து எடுத்து வரப்பட விருக்கின்றன. இதற்கான ஒழுங்கு களை வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் மேற் கொண்டுள்ளனர்.

தற்பொழுது தார் பரல்களுக்கு ஏற்பட்ட பற்றாக் குறையினால் குடாநாட்டில் உள்ள பிரதான வீதிகள் முழுமையாகத் திருத்த முடி யாத நிலை ஏற்பட்டுள்ள போதிலும் அதன் கலவையைக் கொண்டு சிறுகுழிகள் மற்றும் சேதங்கள் சீர்செய்யப்பட்டு வருகின்றன.

தற்பொழுது சேதமடைந்த வீதிகளை முழு மையாக புனரமைக்கக் கூடிய வகையில் 3 ரோலர்களும் தார் பரல்களும் கொழும்பிலி ருந்து எடுத்து வருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சபை வட்டாரங் கள் தெரிவித்துள்ளன.

(ஓ-6-5)

## அங்கவீனமுற்றவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவு

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சின் மகிந்த சிந்தனை வேலைத் திட்டத்தின் கீழ் அங்கவீனமுற்ற நபர்களைக் கொண்ட 7 குடும்பங்களுக்கு 2009 ஆம் ஆண் டுக்கான மாதாந்தக் கொடுப்பனவு வழங்கு வதற்கான அனுமதி கிடைத்துள்ளதாகவும் தெரிவு செய்யப்பட்டோரை தென்மராட்சிப் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினருடன் தொடர்பு கொள்ளுமாறும் பிரதேச செயலர் எஸ். ஸ்ரீ நிவாசன் தெரிவித்துள்ளார். (ஓ-29)

## மெய்வல்லுநர் திறனாய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியா லயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி, கணனி வள நிலையம் மற்றும் சமையலறை திறப்பு விழா, போட்டோ பிரதி சேவை, ஆய்வுகூடத் தொகுதி, மின்னி ணைப்பு தொடக்க விழா என்பன நாளை முற் பகல் 10 மணிக்கு வித்தியாலய மைதானத் திலும் வித்தியாலய வளாகத்திலும் அதிபர் ச. சத் தியவரதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட செயலரும் அரசாங்க அதிபருமான க. கணேஷ் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந் தினர்களாக யாழ் மாவட்ட ஈழமக்கள் ஜனநா யக்கட்சியின் அமைப்பாளர் சில்வேஸ்ரர் அலன் ரின், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ந. திருலிங்கநாதன் கௌரவ விருந்தினர்களாக தீவகக் கல்வி வலய வலயக்கல்விப் பணிப்பா ளர் ஜி.வி. இராதாகிருஷ்ணன், நெடுந்தீவு கோட்டக் கல்விப் பணிப்பாளர் க. அரசரத்தினம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஓ)

## வாரம் ஒரு தகவல்

## கையின் பெருமை!

“கையைக் கொடு இப்படி!”

“எதற்கு?”

“கங்கிரஜுலேஷன்ஸ், பரீட்சையில் பாஸாகிட்டியாமே...”

“தாங்க் யூ?”

“இப்படி ஒருவரையொருவர் கையைப் பிடித்து குலுக்கும் பழக்கம் எப்படி வந்தது தெரியுமா உனக்கு? அந்தக் காலத்தில் எல்லாம் வீரர்கள் வாள் அல்லது கத்தியைக் கையில் வைத்திருப்பார்களாம். இரண்டு பேர் சந்திக்கும் போது, ‘என் கையில் ஆயுதம் எதுவும் இல்லை... தாக்குவேன் என்ற பயம் வேண்டாம். நாம் நட்புறவுடன் இருப்போம்... என்பதைத் தெரிவிப்பதற்காக கை கொடுப்பார்களாம். அந்த வழக்கம் அப்படியே நிலைத்துப் போய்விட்டது.”

“இது ஒரு நல்ல பழக்கம் தான். மனிதர்கள் ஒருவரைப் பார்த்து ஒருவர் பயப்பட வேண்டிய அவசியமே இருக்கக் கூடாது. எல்லோரும் அன்பாக இருக்க வேண்டும். ஆதரவாக இருக்க வேண்டும். சண்டை போட்டுக் கொள்வது ரொம்பத் தப்பு. அன்பைக் காட்டுவதும் கைதான். அடிக்க ஓங்குவதும் கைதான்”

“சில சமயங்களில் அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவமாட்டார்கள் தெரியுமா?”

“அப்படியா சொல்கிறாய்?”

“ஆமாம். நேற்றுக்கூட கடை வீதியில் எனக்கும் இன்னொருவருக்கும் பெரிய சண்டை. கடைசியில் கையை ஓங்கியதும் தான் சண்டை நின்றது.”

“அப்படியா!”

“ஆமாம். ஒரே அடி!”

“யாருக்கு அவனுக்கா?”

“இல்லை... எனக்கு!”

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இராசி பலன்

01.03.2009
(மாசி 17, ஞாயிற்றுக்கிழமை)
பஞ்சமி பின்னிரவு 5.00 மணிவரை
அச்சுவினி முன்னிரவு 9.40 மணிவரை
இராகுகாலம் 4.57- 6.27 மணிவரை
சுபநேரம் 9.27-10.57 மணிவரை
முதலாம் தவக்கால ஞாயிறு

| | |
|---|---|
| மேடம் | தொழில் சிந்தை, போசன நன்மை, பெரியோர் ஆசி, புதிய பொருள் சேர்க்கை. |
| இடபம் | பிதா சிந்தை, சயன சுகக் குறைவு, நிலை மாற்றம், முயற்சி தாமதம். |
| மிதுனம் | தெய்வ சிந்தை, நண்பர்கள் சந் திப்பு, எடுத்த காரியம் கைகூடும், விருந்துபசாரம். |
| கடகம் | சுப நிகழ்வு, இனிய தகவல், தொழில் சிந்தை, போசன சுகம். |
| சிங்கம் | புதிய திட்டமிடல், உடல் நலக் குறைவு, பிதா சிந்தை, பிரயாணம். |
| கன்னி | உறவினர் மனஸ்தாபம், காரிய தடங்கல், பணக்குறைவு, உடல் நலக்குறைவு. |
| துலாம் | அபூர்வ சந்திப்பு, நல்ல செய்தி, ஆரோக்கியம், முயற்சி கைகூடும். |
| விருச்சிகம் | சுக வாழ்வு, பிரயாண நன்மை, கலந்துரையாடல், பொருள்சேர்க்கை. |
| தனுசு | சொத்துப் பிணக்கு, பெரியோர் உதவி, முயற்சி தாமதம், குடும்ப சுகம். |
| மகரம் | புதிய தகவல், மனச் சஞ்சலம், நல்ல முயற்சி, உறவினர் வருகை. |
| கும்பம் | கூட்டு முயற்சி, தனலாபம், விருந்து பசாரம், செல்வாக்கு. |
| மீனம் | குடும்பக் கவலை, முயற்சி தாமதம், போசன சுகக்குறைவு, விவாதம். |

வளவன்

## வலிகள்

பத்திரிகை பக்கங்களில்
பல நாளாய்...
பரிதாபச் செய்திகள்
நித்திரையில் ஷெல்வீச்சு
நித்தமும் உயிரிழப்பு
எத்தனை நாட்கள் தான்?
இத்தனை சோகங்களும்
முடிவில்லா விடிவிற்குள்...
ஜனனத்தை யாசித்த
குஞ்சுகளும் குருத்துக்களும்
மரணத்தின் கோரங்களுக்குள்
காலத்தை காவு கொண்டன.
சிந்தும் குருதிக்குள்
சின்னா பின்னப்பட்டு
புதையும் உடலங்கள்
இரத்த வாடைக்குள்
இனங்காணப்படாமல்...
சொந்தங்களை இழந்தன.
சோகத்தின் சாயலில்
சொல்லத் துடிக்கும்
இதழ்களில் மௌனித்து
நிற்கின்றது தேசத்தின்
உறவுகள்.

க. நாகேஸ்வரா, சண்டிலிப்பாய்.

# திருகோணமலையிலிருந்து சிகிச்சையின் பின் மன்னார் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டோர் விபரம்

வன்னியிலிருந்து காயமடைந்த நிலையில் திருகோணமலை வைத்தியாசாலைக்கு கொண்டு வரப்பட்டு சிகிச்சையின் பின்னர் கடந்த செவ்வாய்க்கிழமை மன்னார் வைத்தியாலைக்கு மாற்றப்பட்டுள்ள 112 பேரின் பெயர் விபரங்கள் வருமாறு,

கே.விஜிதா-(வயது 28),புதுக்குடியிருப்பு, பி.லலிதா-(வயது-48) புதுக்குடியிருப்பு, எஸ்.பிருந்திகா-(வயது-13),வெள்ளாங்குளம் மன்னார், எஸ்.கேதவள்ளி (வயது46),வெள்ளாங்குளம் மன்னார்,கனகமணி- (வயது64) விசுவமடு பாரதிபுரம், எஸ்.சுகந் தினி (வயது29) விசுவமடு பாரதிபுரம்,நதிஸ் ரெல்லா-(வயது 17) வட்டக்கச்சி,நாகதர்சினி-(வயது26) திருமுருகண்டி கிளிநொச்சி, சி.கமலாதேவி- (வயது 65), திருமுருகண்டி கிளிநொச்சி, எஸ்.தர்சன்-(வயது 7) திருமுருகண்டி கிளிநொச்சி,

சி.வசந்தராணி-(வயது43) வட்டக்கச்சி, கே.பூரணி - (வயது56),உதயநகர்மேற்கு,விதர்மச் செல்வி -(வய்து35), செல்வபுரம் வடக்கு, வி.சிந்து ஜன் - (வயது 11/2),செல்வபுரம் வடக்கு, ஆர்.சிவஞானம்-(வயது59), செல்வபுரம் வடக்கு, பி.கன கமணி - (வயது 62) மாமுல்லை முல்லைத் தீவு.

பு.ராசமலர் - (வயது 55), மல்லாவி, ரி.விமலா தேவி-(வயது 61),கனகபுரம்,எஸ்.சுங்கலிற்றா - (வயது57), மாந்தை திருக்கேதீஸ்வரம், எம்.அனலாவதி-(வயது 30) மாந்தை திருக்கேதீஸ்வரம், எம்.மதுசாலினி-(வயது9), மாந்தை திருக்கேதீஸ்வரம்,எம்.மகலன் - (வயது4), மாந்தை திருக்கேதீஸ்வரம்,வை.மாரியம்மா தர்மபுரம்.

வி.பிச்சைமுத்து-(வயது 69),முழங்காவில், எஸ்.ஜெயபாலன்(வயது32), முழங்காவில், எஸ்.டினேசன் - (வயது17) பெரியபரந்தன், எஸ்.சந்திரவதனி (வயது 34) பெரியபரந்தன், எஸ்.கோவிந்தபிள்ளை,(வயது 70) வட்டக்கச்சி,கே.சேதேவி-(வயது60) வட்டக்கச்சி,ஏ.பெர்னாண்டோ - (வயது 55) யாழ்ப்பாணம், பொன்னுத்துரை - (வயது70)யாழ்ப்பாணம்,எம்.சுஜிவன்- (வயது14),வட்டக்கச்சி,எம்.வசந்தராணி - (வயது44), வட்டக்கச்சி, பி.உதயகுமார் - (வயது 41), பூநகரி, கே.கணபதிப்பிள்ளை- (வயது 52), விசுவமடு,

ஜி.வோல்ரன் - (வயது 33) கல்மடு கிளிநொச்சி, டி.சஜிந்த் - (வயது14) சுண்டிக் குளம், வி.திருநாவுக்கரசு-(வயது56) சுண்டிக்குளம், கே.கருணேஸ்வரன்-(வயது41) புதுக்குடியிருப்பு,எம்.விமலகுரு-(வயது 56),இரணப்பாறை, டி.உதயகுமார்-(வயது27), கிளிநொச்சி,யு.ராகினி-(வயது27)கிளிநொச்சி,யு.கஜிவன்-(வயது 8)கிளிநொச்சி,யு.சுஜிவன்- (வயது4) கிளிநொச்சி),யு.பூமிகா-(வயது 1) கிளிநொச்சி,எஸ். தம்பிராஜ்-(வயது71)கிளிநொச்சி, எஸ்.நவி-(வயது 13),கிளிநொச்சி,

பி.லெட்சுமணன்-(வயது54) கிளிநொச்சி, ஜி.ஏ.பிள்ளை-(வயது53) சாலம்பன் மன்னார், ஜி.எலிசபெத்-(வயது50) சாலம்பன் மன்னார்,ஜே.சின்னத்துரை-(வயது60) கைதடி, சகாயராஜா - (வயது 36) மிருசுவில் வடக்கு, எஸ்.எம். நிரஞ்சனி-(வயது31) மிருசுவில் வடக்கு, எஸ். அனஸ்ரன்- (வயது02), மிருசுவில் வடக்கு,டி.யோகநாதன்-(வயது 56), திருநகர் கிளிநொச்சி, எஸ்.புகழரசன்-(வயது13) திருநகர் கிளிநொச்சி, ஆர்.முருகேஸ்-(வயது 47), கிளிநொச்சி, பி. சிவகுமார் - (வயது35), கரக்காதீவு-பூநகரி.

எஸ்.குமரன்-(வயது12) கரக்காதீவு- பூநகரி, எஸ்.குக இன்பன் - (வயது6) கரக்காதீவு -பூநகரி, எஸ்.சம்மின்பன் - (வயது 2 1/2), கரக்காதீவு-பூநகரி, வி.வள்ளிப்பிள்ளை - (வயது 70), கரக்காதீவு -பூநகரி, ஜீ.ஜிவனா- (வயது 13), நெற்புலவி பூநகரி, ஜி.நிரோஜன் - (வயது 12) நெற்புலவி பூநகரி,ஏ.நவராசா-(வயது 33), திருநகர் கிளிநொச்சி, ஏ.தமிழிசை - (வயது7), திருநகர் கிளிநொச்சி, ஏ.தமிழ்ப்பிரியன் - (வயது3) திருநகர் கிளிநொச்சி, டி.ஜெனா - (வயது18) பூநகரி, பி.அழகன் - (வயது59) கிளிநொச்சி, சி.ரமேஸ் குமார்- (வயது22) உடுத்துறை தாளையடி,எஸ்.செல்வராணி-(வயது 45) உடுத்துறை வடக்கு.

எஸ். கமல்ராஜ் - (வயது18), வட்டக்கச்சி, கே.யோகேஸ்வரி - (வயது56) தாளையடி, கே.கணபதிப்பிள்ளை - (வயது57) தாளையடி, ஜி.அரவிந்தன் - (வயது31) ஒட்டுசுட்டான், ஏ.எதனிக்கா - (வயது29) ஒட்டுசுட் டான், ஏ.கிருஷாந் - (வயது11), ஒட்டுசுட்டான், ஏ.அனுசாத் - (வயது 8) ஒட்டுசுட்டான், என்.காண்டீபன் - (வயது 23) மல்லாவி, என்.தன லட்சுமி - (வயது53) மல்லாவி, எம்.கந்தையா - (வயது61) ஆனைவிழுந்தான் குளம், எஸ்.வடிவேல் - (வயது 68) பூநகரி, வி.இசைநிலா - (வயது2 1/2) வட்டக்கச்சி, ஆர்.பி.உம்மா - (வயது28) வட்டக்கச்சி, ஆர். அபிநயா - (வயது8) வட்டக்கச்சி, ஆர். அபிக்கா- (வயது6) வட்டக்கச்சி,

கே.கிருஸ்ணகுமாரி - (வயது 11) இரணப்பாலை, கே.டினேஸ்கரன் - (வயது 5) இரணப்பாலை, எஸ்.ரஜனி - (வயது 28) யாழ்ப்பாணம், எஸ்.சிலகாவதி -(வயது56) யாழ்ப்பாணம், எஸ். சிறிவனஜா - (வயது36) மல்லாவி, எஸ்.கிருஷாந்த் - (வயது13) மல்லாவி, எஸ்.தனுசா - (வயது9) மல்லாவி, வி. மிருதுலா - (வயது 44) முல்லைத்தீவு, வி.அவிசங்கா - (வயது9) முல்லைத்தீவு, என். கார்த் திகேசு - (வயது67), நயினாதீவு, கே.சரஸ்வதி - (வயது 60) நயினாதீவு, கே.கருணேஸ்வரன்- (வயது41) நயினாதீவு, கே.விஜிகரன் - (வயது23) யாழ்ப்பாணம்,கே.கார்த்திகேஸ்வரி - (வயது40) யாழ்ப்பாணம்.

எம்.சிறிதர் - (வயது44) மல்லாவி ,எம்.சர்வவேஸ்வரன் - (வயது26), முல்லைத்தீவு, வி.வி.ராசா - (வயது35), முல்லியடி, டி.கனகசபை - (வயது82), முத்தையன்கட்டு, வி.சிவகுரு - (வயது58), நெடுங்கேணி, எம்.குமாரசாமி - (வயது59), நெடுங்கேணி, பி.நாகலிங்கம் - (வயது72), கிளிநொச்சி, கே.சுரேஷ் - (வயது 33), திருநகர், சிவராஜ் - (வயது23) கனிவன்குளம் வில்லான்குளம்.

எஸ்.சண்முகராசா - (வயது47) கிளிநொச்சி, எஸ். கிருபாசினி - (வயது3) கிளிநொச்சி, எஸ்.லக்சனா - (வயது2 1/2) கிளிநொச்சி. (ஓ-5)




காரைநகர் தியாகராஜா மத்தியமகா வித்தியாலயத்தில் ஊடக கற்கைநெறி அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது. இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சிமைய பணிப்பாளரும் வாழ்நாள் பேரா சிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் கல்லூரி அதிபர் ஆ.குமரேசமூர்த்திமற்றும் ஊடகக் கல்வி பொறுப்பாசிரியர் ந.கணேசமூர்த்தி ஆகியோர் நிற்பதையும் கல்லூரி அதிபர் தலைமையுரை நிகழ்த்துவதையும் ஊடக கற்கை நெறி பாடவிதானத்தினை கல்லூரி மாணவி ஒருவருக்கு பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை வழங்கி ஆரம்பிப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்-கற்பகன்)

## சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... 21





தொடர்ந்து நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான இரண்டாவது, மூன்றாவது ஒருநாள் போட்டிகளில் முரளிதரன் அணியில் சேர்க்கப்பட்ட வில்லை என்பதுடன் இரண்டாவது போட்டியில் மட்டும் வெற்றி பெற்று இலங்கை அணி ஒரு நாள் தொடரை 1:2 என்ற கணக்கில் இழந்தது.

இத் தொடரைத் தொடர்ந்து இலங்கை அணி 1994 ஆம் ஆண்டு ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட்,3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது.

இதில் முதலாவது டெஸ்ட் போட்டி 1994ஆம் ஆண்டு ஜனவரி 18ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரை லக்னோவில் நடைபெற்றது. இப்போட்டி புதிய டெஸ்ட் விதிகளுக்கு அமைய 5 தினங்களைக் கொண்டதாக மாற்றப்பட்டது. முதலாவது 5 நாட்களில் நான்காவது நாள் ஓய்வு நாளாக வழங்கப்படும்.

**பாலா**

இப்போட்டியில் நாணயச் சூழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 511 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் முரளிதரன் 41.5 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 162 ஓட்டங்களைக் கொடுத்து சித்து 124, கபில்தேவ் 42, நயன்மொங்கியா 44,மன்ஜெக்கர் 61 மற்றும் சயுக்கன் 3 ஆகியோரை ஆட்டமிழப்புச் செய்து 5 விக்கெட்டுக்களை வீழ்த்தி ஜொலித்தார்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 218 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து பொலோன் நிலைக்கு தள்ளப்பட்டது. இதில் முரளிதரன் 6 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 9 ஓட்டங்களை ஆட்டம் இழக்காமல் எடுத்தார்.


இதன் அடிப்படையில் முதலாவது இன்னிங்ஸில் 293 ஓட்டங்கள் பின்னிலையில் இருந்த இலங்கை அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி 174 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து இன்னிங்ஸ் மற்றும் 119 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் முரளிதரன் ஓட்டம் எதனையும் எடுக்காமல் ஆட்டமிழந்தார்.

இவ் வெற்றியின் மூலம் இந்திய அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்த நிலையில் இரண்டாவது டெஸ்ட் 1994 ஜனவரி 26ஆம் திகதி முதல் 30 ஆம் திகதிவரை பெங்களூரில் நடைபெற்றது.


(பயணிக்கும்)

## எண் விளையாட்டு-25



**போட்டிவிதிகள்:** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்ளில் நிரப்பப்படும் எண் களின் கூட்டுத் தொகை, கட்டங் களின் மேல்புறத்தில் கொடுக்கப்பட் டுள்ள எண்ணுக்கு சமமாக வர வேண்டும். இடமிருந்து வல மாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங்களுக்கான கூட்டுத் தொகை இடப் புறம் கொடுக்கப்பட்டுள்ளது.

நேற்றைய பகுதிக்கான விடை



1 முதல் 9 வரையான எண் களை பயன்படுத்த வேண்டும். ஆனால் ஒரு வரிசையில் பயன்படுத்திய எண் திரும்ப வரக்கூடாது.

# இலங்கையில் தமிழர் 84

### ஹெள மக்களும் தமிழ் மக்களும் பொ.ஆ.300-900

பொ.ஆ.மு.300க்கும் 900க்கும் இடையில் ஆந்திரப் பிரதேசம் , கர்நாடகம், தமிழ் நாடு மற்றும் கேரளம் ஆகிய தென்னிந்தியப் பகுதிகளிலிருந்தும் சிற்பிகளும் பிற கலைஞர்களும் இலங்கைக்குச் சென்று பணியாற்றினர் என்பதற்குத் தொல்லியல் மற்றும் இலக்கியச் சான்றுகள் உள்ளன.

மூன்றாம் நூற்றாண்டுக்கும் ஆறாம் நூற்றாண்டுக்கும் இடையில் தென்னிந்தியாவிலிருந்து பரவிய பௌத்த மதச் செல்வாக்குக் குறிப்பிடத்தக்க அளவுக்கு ஆந்திரத்திலிருந்து வந்தது. அனுராதபுரத்தில் மட்டுமன்றி வடக்கில் யாழ்ப்பாணத் தீபகற்பத்திலும் இச் செல்வாக்குக் குறிப்பிடத்தக்கதாக இருந்தது.

ஆந்திரத்திலிருந்த பிரசித்தி பெற்ற பௌத்த தலங்களாகிய அமராவதி மற்றும் நாகார்ஜுனக் கொண்டா ஆகிய இடங்களிலிருந்தும் பௌத்த சங்கத்தார் வந்திருப்பார் என்பதில் ஐயமில்லை. இலங்கையிலிருந்து ஆந்திரத்துக்குச் சென்ற பௌத்த துறவிகள் அமராவதியில் தங்கியிருப்பதற்கு ஒரு பள்ளி சிங்கள விகாரை என்ற பெயரால் அமைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே இலங்கையிலும் ஆந்திரத்துப் பௌத்த துறவிகள் தங்குவதற்குப் பள்ளிகள் இருந்திருக்கும் எனலாம்.

சங்கத்தார் மட்டுமன்றி , பௌத்த சிற்பங்களையும் கட்டிடங்களையும் அமைப்பதற்குக் கூட ஆந்திரத்திலிருந்து சிற்பிகள் வந்திருப்பர். அவர்கள் இலங்கையில் பணியாற்றியதற்குச் சான்றாக ஆந்திரக் கலையின் செல்வாக்கைப் பிரதிபலிக்கும் சிற்பகங்கள் கிடைத்துள்ளன. சில ஆந்திரக் கலை வேலைப்பாடுகள் ஆந்திரத்திலே செய்யப்பட்டு வர்த்தகர்களால் இலங்கைக்குக் கொண்டு செல்லப்பட்டன.

ஆந்திரச் சிற்பக் கலையின் செல்வாக்குக் கூடுதலாகக் காணப்பட்ட இடம் இலங்கையின் வட பாகம் ஆகும். ஆந்திரப் பாணியில் அமைந்துள்ள புத்தர் சிலைகள் பல யாழ்ப்பாண மாவட்டத்தில் சுன்னாகம் மற்றும் வல்லிபுரம் ஆகிய இடங்களிலும், அனுராதபுர மாவட்டத்தில் அனுராதபுரம் மற்றும் மஹ இல்லுப்பள்ளம போன்ற இடங்களிலும் கிடைத்துள்ளன. இவற்றுள் சில ஆந்திரத்தில் இருந்தே இறக்குமதி செய்யப்பட்ட சிலைகள். ஆந்திரத் துச் சிற்பிகள் இக் காலப் பகுதியில் இலங்கையின் வடபாகத்தில் பணியாற்றியிருப்பர் என்பதை மறுப்பது கடினம்.

ஆறாம் நூற்றாண்டுக்குப் பின் பல்லவ அரசிலிருந்து சிற்பிகளும் பிற கலைஞர்களும் இலங்கைக்குச் சென்றிருந்தனர். தமிழ்நாட்டில் பல்லவர் ஆட்சியிலே தான் தனிக் கற்களால் கோயிலமைக்கும் முறை தொடங்கப்பட்டது இத்தகைய கட்டடக் கலையில் திறமை பெற்ற சிற்பிகள் இலங்கைக்குச் சென்று இம் முறையை அறிமுகப்படுத்தினர்.

அதன் விளைவாய் அமைக்கப்பட்ட கட்டடங்களுள் நாலாந்தாவிலுள்ள கெடிகே மற்றும் தெற்கு இலங்கையில் தெவுந்தர (தெவிநுவர) என்னும் இடத்தில் உள்ள உற்பலவண்ணன் ஆலயம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

பல்லவர்களுடைய சிற்பப் பாணி கிழக்கு இலங்கையிலும் அனுராதபுரத்திலும் உள்ள பல சிற்ப வேலைப்பாடுகளில் வெளிப்படுகின்றது.

அனுராதபுரத்தில் இஸுருமுனிய என்ற இடத்தில் ஐயத்திற்கிடமின்றிப் பல்லவ அரசிலிருந்து சென்ற சிற்பிகளின் கைத்திறனை வெளிப்படுத்தும் படைப்புக்களாகப் பாறையில் செதுக்கப்பட்டுள்ள புடைப்புச் சிற்பங்கள் அமைகின்றன.

இவற்றுள் ஒன்று ஐயனார் சிற்பம் என அடையாளம் கண்டு கொள்ளப்பட்ட "குதிரைத் தலையும் மனிதனும்" எனப் பொதுவாக வர்ணிக்கப்படும் சிற்பமாகும். பல்லவர் சிற்பக் கலையின் சிறப்பியல்புகளைக் கொண்டுள்ள இச் சிற்பம் கலை விமர்சகர்களால் போற்றப்படும் ஒரு சிறந்த வேலைப்பாடாகும்.

இதற்கு அருகில் உள்ள பாறைப் புடைப்புச் சிற்பம் மாமல்லபுரத்தில் உள்ள மிகப் பிரசித்தி பெற்ற பாறைச் சிற்பத்தை ஒத்துள்ளது.

அனுராதபுரத்துக்கு வெளியே கிழக்குக் கரையோரத்தில் மஹாயான பௌத்த தலங்களில் பல்லவர் சிற்பக் கலையின் செல்வாக்கைப் பிரதிபலிக்கும் அழகிய சிற்பங்கள் சில கிடைத்துள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் திரியாய் என்னும் இடத்தில் உள்ள மஹாயான சைத்தியத்தின் துவாரபாலகர் சிற்பங்கள், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸிதுல்பவு (சித்தலப்பர்வதம்) மற்றும் குருக்கள் மடம் ஆகிய இடங்களிள்ள பௌத்த சிற்பங்கள் பல்லவர் பாணியில் அமைந்துள்ளன.

சிற்பங்களைச் செய்வதற்கு மட்டுமன்றி, மஹாயான பௌத்தர்களுடைய சமஸ்கிருதக் கல்வெட்டுக்களைத் தமிழ்நாட்டு எழுத்து முறையாகிய பல்லவ கிரந்த எழுத்தில் பொறித்து வைப்பதற்கும் தேர்ச்சி பெற்ற தமிழ் நாட்டுச் சிற்பிகள் சென்றிருந்தனர் என்பதைக் காட்டும் கல்வெட்டுக்கள் கிழக்கு இலங்கையிலும் வேறு இடங்களிலும் கிடைத்துள்ளன.

#### வர்த்தக வளர்ச்சி

பல்லவர்களுடைய ஆதிக்கப்படர்ச்சியின் ஒரு முக்கிய விளைவு கடல் வணிகம் முன்னேற்றமடைந்து வணிக கணங்களின் நடமாட்டம் வங்காள விரிகுடாவில் தென்னிந்தியாவுக்கும் தென் கிழக்கு ஆசியாவுக்கும் இடையில் பெருகியமையாகும். இதன் ஒரு கூறாக இலங்கையுடன் நடைபெற்ற வணிகம் அமைந்தது.

பேராசிரியர்
**கா. இந்திரபாலா**

இலங்கையில் தமிழ் இனக்குழு மேலும் வலுப்பெறுவதற்கு உதவிய காரணிகளுள் மிகவும் முக்கியமானதாக இவ் வணிக வளர்ச்சியைக் கருத வேண்டும்.

இந்தியாவுக்கும் தென்கிழக்காசியாவுக்கும் இடையில் வளரத் தொடங்கிய வர்த்தகம் முதலாம் நூற்றாண்டளவில் தமிழ்நாட்டுத் துறைகளையும் தொடர்புபடுத்தி முன்னேறியது. (தொடரும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

3



சிறுவயதில் ஒபாமா

**1870** ஜோனஸனின் ரத்து செய்யும் அதிகாரம் நீக்கப்பட்டு யாப்பின் 15 ஆவது திருத்தச் சட்ட மூலம் அமெரிக்கப் பிரஜை ஒவ்வொருவருக்கும் இருக்கும் வாக்குரிமையை இனம், நிறம் அல்லது ஏலவே அடிமையாக இருந்தமை போன்ற காரணங்களைக் காட்டி மறுக்க முடியாதபடி உறுதிசெய்யப்பட்டது. தென் கறோலினாவைச் சேர்ந்த ஜோஸப் றெயினி என்பவர் அமெரிக்கப் பிரதிநிதிகள் சபைக்கு தெரிவு செய்யப்பட்ட முதலாவது கறுப்பினத்தவராவார்.

**1875 மக்களவை (கொங்கிறஸ்)** குடியுரிமைச் சட்டத்தை நிறைவேற்றியது. இதன் மூலம் எல்லா அமெரிக்கர்களுக்கும் உணவு விடுதிகள், தியேட்டர்கள், பொதுப் போக்கு வரத்து ஊர்திகள் ஆகியவற்றை தடையின்றிப் பயன்படுத்த அதிகாரம் வழங்கப் பட்டது.

நீதிமன்றங்களில் ஜுரர்களாக சேவையாற்றவும் அவர்களுக்கு உரிமை கிடைத்தது. இருப்பினும் மேல் நீதிமன்றம் இது யாப்பின் வரையறைக்கு அப்பாற்பட்டது என்று தள்ளுபடி செய்தது. ஆகவே பல விடயங்களில் இன ஒதுக்கம் தொடர்வதை முழுமையாகத் தடுக்க இன்னும் காலம் மலரவில்லையெனலாம்.

**1881** ரென்னசி மாகாண ரயில்களில் பயணிகளை கறுப்பு வெள்ளை என்று பாகுபடுத்தி தனி இடங்களை அவர்களுக்கென ஒதுக்குமாறு சட்டமியற்றியது. அடுத்த இரு தசாப்தங்களுக்கு தென் மாநிலங்களில் ஒதுக்கம் தொடரப்பட்டு பொது வாழ்விலும் அரசியலிலும் வெள்ளையர்களின் மேலாதிக்கம் வலுப்பெற்றிருந்தது.

**1909** மத்யு ஹாசன் - ஒரு ஆபிரிக்க அமெரிக்கர்-வடதுருவத்தில் அமெரிக்கக் கொடியைப் பறக்க விட்ட முதல் மனிதன்.

**1931** -13 வயது 21 வரை வயது நிரம்பிய ஒன்பது கறுப்பின இளைஞர்கள் ஒரு காரில் அலபாமா கிராமத்தில் சவாரி வந்தனர். அவர்கள் இரு வெள்ளைக்காரப் பெண்களைக் கற்பழித்தார்கள் என்ற பொய்யான குற்றச்சாட்டின் பேரில் சிறையிலடைக்கப்பட்டு நீதிமன்றில் விசாரிக்கப்பட்டனர். அவர்களை மிக விரைந்து குற்றவாளிகளாகக் கண்டு மரணதண்டனையும் வழங்கினர்.



ஒபாமாவின் தந்தை-தாய்

**1936** ஜெஸ் ஓவன்ஸ் ஒலிம்பிக் விளையாட்டில் பங்கேற்று நான்கு தங்கப் பதக்கங்களை வென்றார்.

அடொல்வ் ஹிற்லர் எழுச்சிபெற்ற தனது ஜேர்மனியை உலகிற்குக் காட்ட விரும்பினார். ஆனால் இன்றும் நினைவிலிருப்பது ஓவன்ஸ் வென்றெடுத்த நான்கு தங்கப் பதக்கங்களே!

**1955** றோசா பார்க்ஸ் அலபாமாவின் மொன்ற்கோமெறியில் பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருந்தார். அப்போது ஒரு வெள்ளையருக்கு றோசாவின் சீற்றைக் கொடுக்குமாறு வற்புறுத்தப்பட்டார். அதற்கு அவர் மறுக்கவே ஆர்ப்பாட்டம் தொடங்கியது.

அதைத் தொடர்ந்து ஏற்பட்ட பஸ் பகிஷ்கரிப் பின் ஈற்றில் நகர பஸ்களில் இன ரீதியான ஒதுக்கீடுகள் முற்றாகத் தடைசெய்யப்பட்டன. இதன்மூலம் றோசா உலகப் புகழ்பெற்றவரானார்.

**1957** தேசிய காவற்படையினர் அர்கன்சாஸைச் சேர்ந்த லிற்றில் றொக் என்ற நகரத்தில் உள்ள மேல் நிலைப் பள்ளியில் சேர்ந்து கல்வியைத் தொடரவிடாது 9 மாணவர்கள் தடைசெய்யப்பட்டனர்.

இது நாடளாவிய நெருக்கடியை தோற்றுவித்து பள்ளிக்கூடம் 3 வாரங்களின் பின் இராணுவ உதவியுடன் ஆரம்பமாகியது. இக்கால கட்டத்தில் தான் மார்ட்டின் லூதர் கிங்கின் தலைமையில் தெற்கு கிறிஸ்தவ தலைவர்களின் மாநாடு தொடங்கப்பட்டது. அவர்கள் தங்களது குடி யுரிமையைப் பெற்றுக்கொள்ள மகாத்மாகாந்தியின் அகிம்சை வழியைத் தேர்ந்தெடுத்தனர்.

**1961** பராக் ஒபாமா ஹாவாயின் ஹொனோலுலுவில் பிறந்தார்.

**1963** மார்ட்டின் லூதர் கிங் வரிங்டனில் கூடியிருந்த கிளர்ச்சியாளர்கள் மத்தியில் "நான் காணும் கனவு" என்ற தனது புகழ்மிக்க உரையை ஆற்றினார்.

**1965** வழக்கமான போக்கு வரத்து நெரிசல் பொலிஸாருக்கும் பயணிகளுக்கும் இடையில் பெரும் யுத்தமாக மாறியது.

#### ஜம்பொன்

இதைத் தொடர்ந்து ஏற்பட்ட குழப்பம் ஆறு நாட்கள் நீடித்து 34 பேரை பலிகொண்டது.

இச்சம்பவம் நாட்டையே உலுக்கியது.

**1967** குடியுரிமை வழக்கறிஞர் துர்குட் மார்ல் உயர் நீதிமன்றத்தின் முதல் கறுப்பினத்தைச் சேர்ந்த நீதியரசராகிறார். றொபேர்ட் வீவர் மந்திரியாகும் முதல் கறுப்பராவார் என்றாலும் உள்நாட்டு போர் நடந்து முடிந்து ஒரு நூறு ஆண்டுகள் கழிந்த பின்னும் கூட கறுப்பர் ஒருவர் அமெரிக்காவின் அதிபராகும் சிந்தனையை இன்னும் யாராலும் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. (தொடரும்)

# பங்களாதேஷ் கலவரத்தினை அடுத்து

# 130 இராணுவ அதிகாரிகள் மாயம்

## பலர் உயிருடன் புதைக்கப்பட்டதாக தகவல்

(டாக்கா)

பங்களாதேஷில் துணை இராணுவப் படையினரால் ஏற்பட்ட கலவரம் ஓய்ந்து இயல்பு நிலை திரும்பியுள்ளது. இருந்தாலும், துணை இராணுவப்படை தலைமையகத்தில் இருந்த 130 க்கும் மேற்பட்ட இராணுவ அதிகாரிகளைக் காணவில்லை என தெரிவிக்கப்படுகிறது. அவர்கள் உயிருடன் உள்ளனரா அல்லது கொல்லப்பட்டு விட்டனரா என்பது குறித்து உறுதியான தகவல்கள் தெரியவில்லை.



இதனால் அவர்களது குடும்பத்தினர் பீதி அடைந்துள்ளனர். பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் உள்ள துணை இராணுவப் படை தலைமையகத்தில், கடந்த 25 ஆம் திகதி திடீர் கிளர்ச்சி வெடித்தது. ஊதிய உயர்வில் பாரபட்சம் காட்டப்படுவதாகக் கூறி, எல்லை பாதுகாப்புப் படை வீரர்கள், தங்கள் சக அதிகாரிகளை சுட்டுக் கொன்றனர். இதில், எல்லை பாதுகாப்புப் படை இயக்குனர் ஷகீல் அகமது உட்பட 11 அதிகாரிகள் உயிரிழந்தனர். பிரதமர் ஷேக் ஹசீனாவின் வேண்டு கோளை அடுத்து, கிளர்ச்சியில் ஈடுபட்ட வீரர்கள் சரண் அடைந்தனர்.

இருந்தாலும், நாட்டின் மற்ற பகுதிகளில் எல்லை பாதுகாப்புப் படையினர் கடந்த புதன் கிழமை கிளர்ச்சியில் ஈடுபட்டனர். துப்பாக்கிகளுடன் வீதிகளுக்கு வந்து சரமாரியாகச் சுட்டனர். இதில் மொத்தமாக 100 க்கும் மேற் பட்டோர் பலியானதாக அதிகாரபூர்வமற்ற தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில், பிரதமர் ஷேக் ஹசீனா நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். அப்போது அவர், கலவரத்தில் ஈடுபட்ட வீரர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும். நாட்டு நல னைக் கருத்தில் கொண்டு கிளர்ச்சியில் ஈடுபட்ட வீரர்கள், ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு சரண் அடைய வேண்டும் என உருக்கமாக வேண்டுகோள் விடுத்தார். நாடு முழுவதும் உள்ள துணை இராணுவப்படை முகாம்களுக்கு வெளியே இராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டனர்.

டாக்காவில் உள்ள துணை இராணுவப் படை தலைமையகத்தைச் சுற்றி இராணுவம் குவிக்கப்பட்டது. இராணுவ டாங்கிகளும் தலைமையகத்தை முற்றுகையிட்டன. இதையடுத்து, கிளர்ச்சியில் ஈடுபட்ட வீரர்கள் ஒவ்வொருவராக இராணுவ அதிகாரிகளிடம் ஆயுதத்தை ஒப்படைத்து விட்டு சரண் அடைந்தனர். துணை இராணுவப்படை தலைமைய கத்தை இராணுவம் மற்றும் பொலீசார் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தலைமையகம் முழுவதும் இராணுவ வீரர்கள் தேடுதல் வேட்டை நடத்தினர். இதில் 22 அதிகாரிகள் உயிருடன் மீட்கப்பட்டனர். 11 உடல்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இந்நிலையில் அழுகிய நிலையில் மேலும் 30 அதிகாரிகளின் உடல்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

இதுகுறித்து பங்களாதேஷ் தனியார் தொலைக்காட்சி வெளியிட்டுள்ள தகவலின், துணை இராணுவப் படையினரிடையே கலவரம் வெடித்த போது, அங்கு துணை இராணுவப்படை உயரதிகாரிகளின் ஆலோசனைக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. இந்த கூட்டத்தில் நூற்றுக் கணக்கான அதிகாரிகள் கலந்து கொண்டனர். இவர்களில், இன்னும் 130 பேரை காணவில்லை. அவர்கள் உயிருடன் உள்ளனரா அல்லது கொல்லப்பட்டு விட்டனரா என்பது குறித்து உறுதியாக தெரியவில்லை. தலைமையகத்தை ஒட்டியுள்ள கழிவு நீர் கால்வாயில் இருந்து 50 க்கும் மேற்பட்ட உடல்கள் மீட்கப்பட்டுள்ளன எனக் கூறியுள்ளது. துணை இராணுவப் படை அதிகாரிகள் பலர் உயிருடன் புதைக்கப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. இதற்கிடையே காணாமல் போன அதிகாரிகளின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் துணை இராணுவப் படை தலைமையகத்திற்கு வெளியே சோகத்துடன் குவிந்திருந்தனர். (ஓ-6-5)

## ஒபாமாவுக்கு வந்த மர்ம பார்சல்

(வோஷிங்டன்)

அமெரிக்க அதிபர் ஒபாமாவுக்கு சிக்காகோ நகரில் இருந்து ஒரு பார்சல்வந்தது. அந்த பார்சலை அதிகாரிகள் பிரித்து பார்த்த போது அதில் ஒரு போத்தலில் இரத்தம் இருந்தது.

அதை பரிசோதித்து பார்த்த அதிகாரிகள் அதிர்ச்சி அடைந்தனர். அந்த இரத்தத்தில் எய்ட்ஸ் நோயை பரப்பும் எச்.ஐ.வி., வைரஸ் கிருமிகள் இருந்தது தெரியவந்தது.

எய்ட்ஸ் நோயை பரப்பும் கிருமி மூலம் அதிபர் ஒபாமாவை கொலை செய்ய மர்ம நபர்கள் திட்டமிட்டிருந்தது தக்க சமயத்தில் கண்டுபிடிக்கப்பட்டு முறியடிக்கப்பட்டுள்ளது. (ஓ-5)

## உலக தரிசனம்

# அமைதிக்கான நோபல் பரிசுக்கு ஒபாமாவின் பெயர் பரிந்துரை



(வோஷிங்டன்)

இவ்வாண்டின் அமைதிக்கான நோபல் பரிசுக்கு அமெரிக்க அதிபர் ஒபாமாவின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்க அதிபர் ஒபாமா, பிரான்ஸ் அதிபர் நிக்கோலஸ் உள்ளிட்ட 205 பேர்களின் பெயர்கள் நோபல் பரிசிற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

நோபல் பரிசிற்கான இறுதிப் பட்டியல் அக்டோபர் கடைசி வாரத்தில் தயாரிக்கப்பட்டு டிசம்பர் 10 ஆம் திகதி அன்று வழங்கப்பட உள்ளன.

ஜோர்ஜியா பகுதியில் ஏற்பட்ட போரை அமைதி பேச்சுவார்த்தை மூலம் போர் நிறுத்தம் ஏற்படுத்தியதற்காக அமெரிக்க அதிபர் ஒபாமாவிற்கும், பிரான்ஸ் அதிபர் நிக்கொலசிற்கும் இந்த அண்டிற்கான அமைதிக்கான நோபல் பரிசிற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

நோபல் பரிசிற்கு அதிகமானவர்களின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டது இதுவே முதல் முறையாகும். இதற்கு முன் கடந்த 2005 ஆம் ஆண்டு 199 பேர் பரிந்துரை செய்யப்பட்டதே இதுவரை அதிக பட்சமானதாக கருதப்பட்டது. ஆனால் தற்போது 205 பேர்களின் பெயர்கள் பரிந்துரை செய்ப்பட்டிருப்பது அனைவரின் கவனத்தையும் ஈர்ந்துள்ளது. (ஓ-5)

# ஊடகவியலாளர் வித்தியாதரன் விடுதலை செய்யப்பட வேண்டும்

## அகில இலங்கை இந்து மாமன்றம் வேண்டுகோள்

(கொழும்பு)

எமது மக்கள் சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் இக் காலகட்டத்தில் பத்திரிகைச் சுதந்திரம் மற்றும் மனித உரிமைகள் மறுக்கப்படுவது வருத்தத்திற்குரியது .

இந்த வகையில் மக்களின் நலன் கருதி பணியாற்றிக்கொண்டிருந்த சுடர் ஒளி ஆசிரியர் ந.வித்தியாதரன் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என வேண்டுகிறோம்.

பத்திரிகைச் சுதந்திரம் எங்கள் சமுதாயத்தின் உயிர்மூச்சு. அதற்கு எந்தவிதமான தடைகளும் கட்டுப்பாடுகளும் விதிப்பதை ஜனநாயகத்தை மதிக்கும் எவராலும் ஏற்றுக் கொள்ளமுடியாது என அகில இலங்கை இந்து மாமன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஓ)

## வழிநடத்தலின்றி இடர்படும் ஞான ஒளி சனசமூக நிலையம்

கோண்டாவில் வடக்கு ஞான ஒளி சன சமூக நிலையத்திற்கு புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது. பல வருடங்களாக செயற்பாடின்றி இருந்த நிலையத்தில் இரண்டு மாதங்களுக்குள் தெரிவு செய்யப்பட்ட மூன்றாவது நிர்வாக சபை இதுவாகும்.

இப்பகுதி மக்களுக்கு நிர்வாக முறைகள், நிதி முகாமைத்துவம், அதிகாரிகளை அணுகும் விதம் போன்றவற்றை எடுத்துரைப்பதற்கு எவரும் இதுவரை முன்வரவில்லை.

இவை தீர்க்கப்படும் பட்சத்தில் இப்பகுதி மக்களும் சமூக செயற்பாடுகளை மேற் கொண்டு முன்னேற முடியும். ஆதலால் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆதரவளிக்க வேண்டும் என ஞான ஒளி சன சமூக நிலையத்தினர் கேட்டுள்ளனர். (ஓ-36)

## காலாவதியான உணவுகள் கைப்பற்றப்பட்டு அழிப்பு

(வடமராட்சி)

சாவகச்சேரி நகரப் பகுதி வர்த்தக நிலையங்களில் சுகாதாரப் பரிசோதகர்களால் காலம் கடந்த உணவுப் பொருட்கள் இனம் காணப்பட்டு அழிக்கப்பட்டன. குறிப்பாக பிஸ்கட் வகைகள், சோடா, மாஜரின் போன்றவை அழிக்கப்பட்டன.

மற்றும் அனுமதி பெறாமல் யூஸ் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டதும் இனம் காணப்பட்டு அழிக்கப்பட்டதாக சுகாதார பரிசோதகர்கள் வட்டாரங்களில் இருந்து தெரிய வந்துள்ளது. (ஓ-10)



தீவகம் தெற்கு பிரதேசசபை புங்குடுதீவு உப அலுவலகத்தின் முன்பள்ளி விளையாட்டுப்போட்டியில் செயலாளர் கை.மகேந்திரலிங்கம் உரையாற்றுவதையும் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் பரிசில் பெற்ற மாணவர்களுடன் நிற்பதையும் பங்கு பற்றிய மாணவர்கள் மற்றும் முன்பள்ளி ஆசிரியரையும் படங்களில் காணலாம்.

# இலங்கையில் போர் நிறுத்தம்; தி.மு.க. அரசின் வினோத விளக்கம்

விடுதலைப் புலிகளை ஒழிக்கின்றோம் என்று கூறி இலங்கை அரசு நடத்தி வரும் தாக்குதல்களில் தமிழ் மக்கள் அழிந்து வருகின்றனர்.

இந் நிலையில் இலங்கை அரசிடம் போரை நிறுத்து என்று நேரடியாக இந்தியா கூற முடியாது என்று கூறி தமிழ் நாட்டின் நிதியமைச்சர் பேராசிரியர் அன்பழகன் கூறியுள்ள விளக்கம் வினோதமாகவுள்ளது.

தமிழக சட்டப் பேரவையில் நிதிநிலை அறிக்கையின் மீது நடந்த விவாத்தில் பங்கேற்றுப் பேசிய பல்வேறு கட்சிகளின் உறுப்பினர்களும் இலங்கையில் உடனடியாகப் போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்றும் அதன் மூலம் மட்டுமே நாளும் கொன்று குவிக்கப்பட்டு வரும் அப்பாவித் தமிழர்களைக் காப்பாற்ற முடியும் என்று வலியுறுத்தினர்.

இதற்கு பதிலளித்துப் பேசிய தமிழக



நிதியமைச்சரும் பேரவை முன்னவருமான பேராசிரியர் க.அன்பழகன் இலங்கை அரசிடம் போரை நிறுத்து என்று அண்டை நாடான இந்தியா நேரடியாக கூறினால் அதற்கு (உலக நாடுகள்) உள்நோக்கம் கற்பிக்கப்படும் என்றும் டென்மார்க், நோர்வே,அமெரிக்கா போன்ற நாடுகள் தலையிட்டால் உள்நோக்கம் கற்பிக்க வாய்ப்பில்லை என்றும் கூறியுள்ளார்.

அதுமட்டுமின்றி இந்தியா நேரடியாக அவ்வாறு கூற முடியாத நிலையில் உலக நாடுகள் சேர்ந்து இலங்கையில் தமிழினம் அழிக்கப்படுவதை தடுக்க வேண்டுமென்று மத்திய அரசு மேலும் முயற்சிக்க வேண்டுமென்று இந்த அரசின் மூலம் வலியுறுத்துகிறேன் என்றும் நிதியமைச்சர் அன்பழகன் கூறியுள்ளார்.

நிதியமைச்சர் பேராசிரியர் அன்பழகன் தமிழக அரசியலில் அனுபவமிக்க மூத்த அரசியல்வாதி, மூத்த அமைச்சர், ஆளும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் அதன் தலைவரும், தமிழக முதலமைச்சருக்கான கருணாநிதிக்குப் பின்னர் பொதுச் செயலராக பொறுப்பில் உள்ள இரண்டாவது பெரிய தலைவர். அப்படிப்பட்ட பொறுப்புமிக்க அமைச்சர் அன்பழகன், தமிழக மக்களும், அவர்களின் அரசியல் பிரதிநிதிகளும் தொடர்ந்து வலியுறுத்தியும் போர் நிறுத்தம் பற்றி இலங்கை அரசிடம் இதுவரை ஒரு வார்த்தை கூட பேசாத மத்திய அரசிற்கு மேலும் ஒரு கோரிக்கை விடுத்திருப்பது ஆச்சரியமாகவுள்ளது.

இலங்கை அரசிடம் போரை நிறுத்து என்று இந்தியா வலியுறுத்தினால் அதற்கு உள்நோக்கம் கற்பிக்கப்படும் என்று எப்போது மத்திய அரசு கூறியது? ஒருவேளை தி.மு.க அரசு அவ்வாறு கருதுவதாக இருந்தால் இதுவரை அது எடுத்த நடவடிக்கை எந்த அடிப்படையில் ? என்ற கேள்வியும் எழுகிறது.

## சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றியது ஏன்?

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர் என்று கூறிக்கொண்டு ஈழத்தமிழினத்தை திட்டமிட்டு அழித்துவருகிறது இலங்கை அரசு என்று ஒக்டோபர் 4ஆம் திகதி தி.மு.க சார்பில் மயிலை மாங்கொல்லையில் நடந்த கூட்டத்தில் தமிழக முதலமைச்சர் கருணாநிதி பேசினார்.

போரை நிறுத்துமாறு இலங்கை அரசை நிர்ப்பந்தியுங்கள் என்று அன்றைய தினம் தி.மு.க உயர்மட்டக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றி பிரதமர் மன்மோகன் சிங்கிற்கும் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்கும் அனுப்பி வைத்ததாகவும் அக் கூட்டத்தில் முதலமைச்சர் தெரிவித்தார்.

அது மட்டுமல்ல, "இன்றைக்கு நாங்கள் விடுக்கிற வேண்டுகோளை (போர் நிறுத்தத்தை) இலங்கை அரசை வலி யுறுத்தி நிறைவேற்றுங்கள் அது நிறை வேற வில்லை என்றால் பின்னர் நாங்கள் எடுக் கும் நிலைப்பாட்டிற்கு ஆதரவாக நில்லுங் கள்" என்று கருணாநிதி பேசினார்.

தாங்கள் நிறைவேற்றி அனுப்பிய தீர்மானத்தை மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு அன்றைக்கே பிரதமர் மன்மோகன் சிங்கைத் சந்தித்து அளித்தார் என்றும்,இலங்கையில் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுக்கிடக்கும் புகைப்படங்களை பிரதமரிடம் அமைச்சர் பாலு காட்டிய தாகவும் அதைப்பார்த்த பிரதமர் அப்போதே தன்னிடம் பேசியதாகவும் அந்தக் கூட்டத்தில் கருணாநிதி கூறினார். இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற முழு முயற்சியை மத்திய அரசு எடுக்கும் என்று பிரதமர் தனக்கு உறுதியளித்ததாகவும் கூறினார்.

அப்போது எந்த அடிப்படையில் உறுதியளித்தார் பிரதமர் உறுதியளித்தும் என்ன காரணத்திற்காக நடவடிக்கை எடுக்கவில்லை? பிரதமரை யார் தடுத்தது?

அடுத்த 10 நாட்களில் ஒக்டோபர் 14ஆம் திகதி தமிழக அரசு கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்திலும் ஒருமனதாக நிறை வேற்றப்பட்ட தீர்மானத்தில் உடனடியாக போர் நிறுத்தம் செய்து அப்பாவித் தமிழர் களின் படுகொலையை நிறுத்த மத்திய அரசு முயற்சி எடுக்க வேண்டும் என்று அல்லவா வலியுறுத்தப்பட்டது? இரண்டு வாரத்தில் போர் நிறுத்தம் நிகழவில்லையென்றால்




தமிழ் நாட்டில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பதவி விலகுவார்கள் என்று அந்தத் தீர்மானத்திலேயே கூறப்பட்டதே?

இலங்கை அரசை *போர் நிறுத்தம் செய்* என்று இந்தியாவால் நேரடியாக வலியுறுத்த முடியாது என்று அப்போது (அந்த 10 நாள் இடைவெளியில்) மத்திய அரசு தெரிவிக்க வில்லையா? அது அந்த நாட்டின் இறை யாண்மையில் தலையிடுவதாகும் என்று இன்றைக்கு கூறுகிறாரே மத்திய உள் துறை அமைச்சர் சிதம்பரம். அதனை அன்றைக்கு தமிழக அரசிற்கு ஏன் தெரிவிக்கவில்லை? இலங்கைத் தமிழர் பிரச்சினையில் 1956ஆம் ஆண்டு முதல் அக்கறைகாட்டி வரும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத்தான் இதுவெல்லாம் தெரியவில்லையா?

சரி அப்போது இதெல்லாம் தமிழக அரசிற்கும் தி.மு.க. தலைமைக்கும் தெரியவில்லை என்று வாதத்திற்கு ஏற்றுக்கொண்டால் கூட இரண்டு வார கெடு முடிவதற்குள் சென்னைக்கு ஓடி வந்த வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி இலங்கை அரசை இந்தியா நேரடியாக வலியுறுத்த முடியாது என்றும் ஒரு தரப்பை மட்டும் போர் நிறுத்தம் செய் என்று எப்படி வலியுறுத்துவது என்றும் தன்னிடம் அவர் விளக்கமளித்ததாக செய்தியாளர்களிடமே முதலமைச்சர் கருணாநிதி கூறினாரே அப்போது கூட நோர்வே நாட்டின் வாயிலாக போர் நிறுத்தம் செய்ய இந்தியா முயற்சி எடுக்கும் என்றுதானே முதல்வர் விளக்கமளித்தார்.

அமைச்சர் பிரணாப் முகர்ஜியும் முதலமைச்சரும் அளித்த விளக்கத்தினை கண்ட பின்னர் தாங்கள் போர் நிறுத்தம் செய்ய தயாராகவுள்ளதாக விடு தலைப் புலிகள் இயக்கம் அறிவித்ததே? ஆனால் மறு தரப்பை (இலங்கை அரசை) இந்தியா ஏன் வலியுறுத்தவில்லை?

அது மட்டுமல்ல, உண்மையிலேயே போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்ற அக் கறை இந்திய அரசிற்கு இருந் திருக்குமேயானால் அது நோர்வே நாட்டை




தொடர்பு கொண்டு பேசியதா? அல்லது அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளை தொடர்பு கொண்டு இது குறித்து விவாதித் ததா?

அது சரி இந்தியாவால் நேரடியாக போர் நிறுத்தம் செய் என்று வலியுறுத்த முடியாது என்று தெரிந்திருந்தும் மீண்டும் மீண்டும் மத்திய அரசை வலியுறுத்தி தமிழக அரசு தீர்மானம் நிறைவேற்றியது ஏன்? அந்த அய்யகோ என்ற இறுதித் தீர்மானம் எதற்கு யாரை வலியுறுத்தி நிறைவேற்றப்பட்டது?

ஒக்டோபர் மாத ஆரம்பம் முதல் *போரை நிறுத்து* என்று தொடர்ந்து தமிழகம் குரல் கொடுத்து வருகிறதே அதற்கு மத்திய அரசு அப்படி ஒரு முயற்சி எடுப்பதாக என்றைக்காவது விளக்கமளித்தது உண்டா? தி.மு.க அரசிற்கு தங்கள் *சங்கடங்களை* விளக்கி அதிகாரப்பூர்வமாக கடிதம் ஏதும் எழுதியது உண்டா?

இலங்கைக்கு வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி பயணம் மேற்கொண்ட போது அவர் போர் நிறுத்தம் பற்றித்தான் பேசப் போகிறார் என்பதுபோல ஒரு பரபரப்பை உருவாக்கியது ஏன்? அவர் போர் நிறுத்தம் பற்றியே பேசாமல் திரும்பியது ஏன், அவருடைய பயணத்தில் போர் நிறுத்தம் பற்றி ஏன் பேசவில்லை என்று தி.மு.க. அரசு கேட்டதா? இல்லையே?

என் இன மக்கள் அங்கே கொத்துக் கொத்தாக கொல்லப்படுகின்றனர். இலங்கை இனவாத அரசு கொன்று குவிக்கிறது என்று பொது மேடையிலும், சட்டப் பேரவையிலும் பேசிய தமிழக



முதலமைச்சர் கருணாநிதி, அந்நாட்டுடன் 'இதமான நெருக்கமான ஆழமான' உறவு ஏற்பட்டுள்ளது என்று சிவ் சங்கர் மேனன் பயணத்தின் முடிவில் சொல்லப்பட்டதற்கு என்ன எதிர்ப்பு தெரிவித்தார்? இதுதான் தமிழின பற்றா? இலங்கைத் தமிழர்களுக்கு காட்டும் நேர்மையா?

ஈழத் தமிழர்கள் வாழ்வில் அமைதி பிறக்க வேண்டும். அவர்கள் அனைத்து உரிமைகளும் பெற்று மகிழ்ச்சியாக வாழவேண்டும். அதனை நான் பார்க்க வேண்டும் என்று உணர்ச்சி ததும்ப பேசிய முதலமைச்சர் கருணாநிதி "இலங்கை இராணுவம் கடந்த 23 ஆண்டுக் காலத்தில் பெற்ற வெற்றிகளின் மூலம் வடக்கில் இயல்பு வாழ்வை நிலை நிறுத்தும் வாய்ப்பை பெற்றுள்ளது" என்று இலங்கைப் பயணத்தை முடித்துக் கொண்டு வந்த அமைச்சர் பிரணாப் முகர்ஜி அறிக்கை விட்டாரே, அதற்கு என்ன பொருள் என்று கேட்டாரா? கேட்கவில்லையே ஏன்?

பிரணாப்பின் பயணத்தை அடுத்து தமிழ்நாட்டில் ஏற்பட்ட எதிர்ப்பை மத்திய அரசிற்கு எதிராக, அதனை தமிழர்களுக்கு சாதகமாக திருப்பாமல், 'எனது ஆட்சியைக் கவிழ்க்க சதி நடக்கிறது' என்று கூறி, அதனை உள்ளூர் அரசியலாக்கி தமிழ்நாட்டு மக்களை திசை திருப்ப முயற்சித்தாரே?

அரசுடன் நல்லுறவு கொண்டு, அதற்கு 'எல்லா உதவிகளையும்' மத்திய அரசு செய்து வருவதை அறிந்தும் அறியாதவர் போல் நடித்துக் கொண்டு, அதற்கு ஆதரவான ஒரு அரசியல் போக்கை தமிழ்நாட்டில் உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது தமிழக அரசு.

ஈழத் தமிழருக்கு எதிரான இலங்கை அரசிற்கு எல்லா விதத்திலும் இந்திய அரசு உதவுகிறது என்பது உலகிற்கே தெரிந்த இரகசியம். ஆனால் அந்த அரசு தமிழர்களின் நலன் காணும் அரசு என்று எந்த மக்களுக்கு உணர்த்த விரும்புகிறது தமிழக அரசு?

**தமிழகத்திலிருந்து தமிழன்**

எங்களுக்கு இந்திய,அரசு முழுமையாக உதவுகிறது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் முழு ஒத்துழைப்பு அளிக்கிறது என்று இலங்கை அமைச்சர்களே கூறிவருகின்றனர்.

(08ஆம் பக்கம் பார்க்க...)

# பயங்கரவாதம் முறியடிக்கும் வரை அரசியல் தீர்வு சாத்தியமாகாது

## ஆனால் அரசின் இலக்கு அரசியல் தீர்வே -லக்ஷ்மன் யாப்பா

(கொழும்பு)

ஆயுதங்களைக் கீழே வைக்குமாறும் அதே வேளை பயங்கரவாதத்தைக் கைவிடு மாறும் 32 நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியம் புலிகளை வலியுத்தியிருப்பதையிட்டு அரசாங்கம் மகிழ்ச்சி தெரிவிப்பதாக ஊடக அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

அரசியல் தீர்வொன்றே அரசாங்கத்தின் இலக்கு ஆகும்.

ஆனால், பயங்கரவாதம் முறியடிக்கப் படும் வரையில் அது சாத்தியமாகாது. முதலில் பயங்கரவாதம் ஒழித்துக்கட்டப்பட வேண்டும் என்றும் அமைச்சர் கூறினார்.

ஊடக மத்திய நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற விஷேட செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் லஷ்மன் யாப்பா அபேவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார். இங்கு அவர் மேலும் கூறுகையில்,

தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வே இறுதியானதாகும்.

இதில் அரசாங்கத்திடம் எந்த மாற்றமும் இல்லை. அரசியல் தீர்வொன்றுக்குச் செல்ல வேண்டுமானால் புலிகள் ஆயுதங்களை கீழே வைக்க வேண்டும் என்பதை அரசாங்கம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது.

ஏனெனில் பயங்கரவாதத்தை வைத்துக் கொண்டு அரசியல் தீர்வு என்பது முடியாத காரியம்.

இதனை சர்வதேசம் உணர்ந்து கொண்டுள்ளது.

புலிப்பயங்கரவாதத்தின் தன்மைகளும் அரசாங்கத்தின் அணுகு முறைகளும் உணரப்பட்டுள்ளதன் வெளிப்பாடாகவே 32 நாடுகளைக் கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றியம், பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமானால் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என்றும் பயங்கரவாத செயற்பாடுகளைக் கைவிட வேண்டும் என்றும் கோரியிருக்கின்றது. உண்மையில் இது அரசாங்கத்திற்கு மகிழ்ச்சி தரக்கூடிய விடயம்.

இதேவேளை கட்டுப்பாடற்ற பிரதேங்களில் இருந்து இடம்பெயர்ந்து வந்து வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதில் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்காகன செயலாளர் ஜோன் ஹோம்ஸ் பூரண திருப்தியடைந்துள்ளார்.

மேலும் யுத்த பிரதேசத்தில் காயமடைகின்றவர்களில் களத்தில் நின்று போராடுபவர்களும் அடங்கியிருப்பதற்கான ஆதாரமும் ஜோன் ஹோம்ஸுக்கு சமர்பிக்கப்பட்டது. இதனையடுத்து இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகளை உணர்ந்து கொண்டவராகவே செய்தியாளர்களிடமும் அவர் கருத்து தெரிவித்திருந்தார். இது எமக்கும் திருப்தியளிக்கின்றது என்றார். (ஓ-5)


## VACANCIES FOR DRAUGHTSMEN

Applications are hereby invited from Suitable persons, who possess the following qualifications, to fill the existing vacancies immediately.

1. N C T in Draughtsman ship or equivalent with Auto cad, and

2. Minimum two years experience in above in any Government or private establishment.

Applications with Bio data etc shall be forwarded to the following address, on or before 07.03.2009

**Manager Human Resources**
**Euroville Engineers and Constructors (PVT) Ltd,**
**866, Point Pedro Road,**
**Nallur, Jaffna.**

(சி/2159)


# இலங்கையில் போர் நிறுத்தம்.....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

காயம்பட்ட சிங்கள இராணுவ வீரர்களுக் குத் தேவையான மருத்துவ உதவிகளை இந்தியா செய்யும் என்று அந்நாட்டு நாடாளுமன்றத்திலேயே இலங்கை சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கூறினார். அதனை மத்திய அரசு மறுக்கவில்லையே?

அதன் பின்னர்தானே, வன்னியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, மருந்துப் பொருட்களை அனுப்ப மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதலமைச்சர் கருணாநிதி வேண்டுகோள் விடுத்தார்? அது நடந்ததா? அதற்கு மத்திய அரசிடம் இருந்து ஏதாவது பதில் வந்ததா?

அரை நூற்றாண்டுக் காலமாக ஈழத் தமிழர்களைக் கொன்று குவிக்கும் அரசிற்கு, தமிழ்நாட்டு மீனவர்களை நாளும் வதைக்கும் இலங்கை அரசிற்கு 'அனைத்து உதவிகளையும்' செய்துவரும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசில் அங்கம் வகித்துக் கொண்டு, அதற்கு தலைமையேற்றுள்ள காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணியை உறுதி செய்வதில் 'பாகீரத பிரயர்த்தனம்' செய்து வரும் தி.மு.க. கட்சியும், அரசும் இதற்கு மேலும் ஈழ மக்கள் நலன் பற்றி பேசாமல் இருந்தாலே அதை கூட ஒரு நேர்மையாக தமிழக மக்கள் கருதுவார்கள்.

இன்றைக்கு ஈழ மக்களின் பிரச்சினை உலக நாடுகளின் கவனத்திற்கு (மத்திய அரசு உதவாமலேயே) முழுமையாக கொண்டு செல்லப்பட்டுவிட்டது.

அமெரிக்க செனட்டின் வெளியறவு துணைக் குழு இலங்கை அரசு நடத்திவரும் இனப்படுகொலை குறித்து விசாரிக்கிறது. அது விடுதலைப் புலிகளை ஒழிப்பதில் தான் கவனம் செலுத்துகிறதே தவிர, தமிழர்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்று குற்றம் சாட்டியுள்ளது.

ஆனால் தமிழினத்தின் நலனையே மூச்சாகக் கொண்டு செயல்பட்டு வரும் தி.மு.க. அங்கம் வகிக்கும் மத்திய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு, காயம்பட்ட இலங்கை இராணுவத்தினருக்கு உதவ மருத்துவ உதவி செய்கிறது. அந்த இராணுவத்தின் தாக்குதலில் காயமடைந்த மக்களுக்கு உணவு மருந்து அளிக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு செவி சாய்க்க மறுக்கிறது.

மொத்தத்தில் இலங்கையில் அரசு நடத்திவரும் இனப் படுகொலைக்கு ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு முழுமையாக ஒத்துழைப்பு நல்கி வருகிறது. அதனை இலங்கை அமைச்சர்களும் பல முறை வெளிப்படையாகக் கூறி தங்கள் மகிழ்ச்சியை வெளியிட்டுவிட்டனர்.

ஆனால், இதெல்லாம் ஏதோ வேறு ஒரு கிரகத்தில் நடப்பது போல, இந்தச் செய்திகளையெல்லாம் அறியாதவர்கள் போல, போரை நிறுத்த உலக நாடுகளுடன் இணைந்து மத்திய அரசு முயற்சிக்க வேண்டும் என்று தமிழக அரசு கூறுவதை அவர்கள் கட்சியினரே கூட நம்ப மாட்டார்கள். அதனால்தான் தங்கள் இயலாமையை வெளிப்படுத்த இரண்டு தி.மு.க தொண்டர்கள் தீக்குளித்து தங்கள் இன்னுயிரை ஈந்துள்ளனர்.

எனவே இதற்கு மேலும் ஈழத் தமிழர்கள் பிரச்சினையில் தமிழக அரசு நாடகம் நடத்துவதை நிறுத்திக் கொள்ள வேண்டும். இனமானம், இனப்பற்று என்றெல்லாம் பேசுவதையும் விட்டுவிட வேண்டும். எது தங்களது அரசியல் வசதிக்கு ஒத்துவர வில்லையோ அதனை கொச்சைப்படுத்துவதையும் தவிர்க்க வேண்டும்.

# இந்திய துணை வெளிவிவகார அமைச்சர் குழுவினர் ஜனாதிபதியுடன் சந்திப்பு

(கொழும்பு)

சார்க் வெளிவிவகார அமைச்சர்களின் 31 ஆவது மாநாட்டுக்கு கலந்துகொள்வதற்காக இலங்கைவந்துள்ள இந்திய துணை வெளி விவகார அமைச்சர் இ. அஹமட் குழுவினர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேற்று முன்தினம் மாலை சந்தித்துப் பேசியுள்ளார்.



அலரிமாளிகையில் இடம்பெற்ற இச் சந்திப்பில் இந்திய வெளிவிவகார செயலர் சிவ் சங்கர் மேனன் இந்திய தூதுவர் அலோக் கிரசாத், பிரதித்தூதுவர் விக்கிரம் மிஸ்ரி ஆகியோர் கலந்து கொண்டதுடன் இலங்கை அரசாங்கம் சார்பில் வெளிவிவகார அமைச்சர் ரோகித்த போகொல்லாகம, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பஷில் ராஜபக்ஷ எம்.பி., ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, வெளிவிவகார செயலர் பாலித கோஹன, நிதி அமைச்சின் செயலாளர் சமித் ஜயசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

சார்க் வெளிவிவகார அமைச்சர்களின் மாநாட்டில் இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி கலந்து கொள்வதாகவே முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இருந்த போதும் ஒரு சில காரணங்களால் அவரது இலங்கைக்கான பயணம் ரத்துச் செய்யப்பட்டதோடு அவருக்கு பதிலாக துணை வெளிவிவகார அமைச்சர் இ.அஹமட் இலங்கைக்கு வந்திருந்தார்.

இந் நிலையிலேயே இச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

இலங்கையின் தேசியப் பிரச்சினை, வடக்கில் காணப்படும் அசாதாரண சூழல் போன்ற விடயங்கள் தொடர்பில் இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றபோதும் இச் சந்திப்பு குறித்த பூரண விபரங்கள் தெரியவரவில்லை. (ஓ-5)


## பனை அபிவிருத்திச் சபையின் 'கற்பகம்' விற்பனை நிலையத்திற்கான கட்டடம் தேவை

பனை அபிவிருத்திச் சபை நெல்லியடியில் விற்பனை நிலையம் ஒன்றை அமைக்கவுள்ளது.

கீழ்க்குறிப்பிடப்படும் பொருத்தமான இடத்தில் இதனை வழங்கக் கூடியதாக இருப்பின் தங்களின் கோரிக்கையுடனான கூறுவிலையை 2009.03.10ஆம் திகதிக்கு முன் கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் முகவரியிலுள்ள சபையின் தலைமைக் காரியாலயத்திற்கு தபால் மூலமாகவோ நேரிலோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் ***கற்பகம் விற்பனை நிலைய கூறுவிலை*** என குறிப்பிடவும்.

*குறிப்பு:-*

01. குறித்த இடம் நெல்லியடி நகரை அண்மித்த சுற்றுவட்டத்தில் பருத்தித்துறை வீதி, கொடிகாமம் வீதி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வீதி ஆகியவற்றினை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

02. கூறுவிலையில் தங்கள் நிலையம் அமைந்துள்ள இடத்தினை விபரமாக குறிப்பிடவும்.

03. கூறுவிலைத் திகதி 10.02.2009ஆம் திகதியிலிருந்து 10.03.2009ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

தொ.பே.இல:- 021 222 2034
021 222 4154

*தலைவர்,*
*பனை அபிவிருத்திச் சபை,*
*தேசிய வீடமைப்புச் செயலகம்,*
*யாழ்ப்பாணம்.*

(சி/2158)


## 31ஆம் நாள் வீட்டுக் கிருத்திய அழைப்பு

கடந்த 30.01.2009 வெள்ளிக்கிழமை அணைந்த

எமது குடும்ப ஜோதி

### அமரர் அம்பலவாணர் பாலகெங்காதரன்

**(பாலு அண்ணா)**

ராஜன் மின்தறி நிலையம் (புன்னாலைக்கட்டுவன்), மகாராஜா நிறுவனம் (யாழ்ப்பாணம்), கல்கிசன்ஸ் (யாழ்ப்பாணம்) ஆகிய வற்றின் முன்னாள் ஊழியர்.

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (01.03.2009) ஞாயிற்றுக்கிழமை பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அத் தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கொட்டாவத்தை,
கல்வளை, சண்டிலிப்பாய்.

*குடும்பத்தினர்.*

(இ-7)

# வன்னி களமுனையில் நடப்பது என்ன?

**இலங்கை போர் நிலவரங்கள் குறித்து தமிழகத்திலிருந்து வெளிவரும் விகடன் சஞ்சிகைகள் குழுமத்தின் இணையத்தளத்தில் வெளியாகிய கட்டுரை இங்கு தரப்படுகிறது.**

## அலசுகிறது -விகடன்

### பொய்ச் செய்திகளால் குவிந்து கிடக்கிறது போர்!

பிரபாகரன் முல்லைத்தீவை விட்டு எப்போதோ போய்விட்டார்.அங்கு முக்கிய தளபதிகளே இல்லை. இன்னும் ஒரு சில நாட்களில் முல்லைத் தீவுப் பகுதியையும் இராணுவம் கைப்பற்றி விடும். இப்போது சுமார் 600 போராளிகள்தான் அமைப்பில் இருக்கிறார்கள்.அவர்கள் தான் மக்களைக் காட்டை விட்டு வெளியில் விடாமல் துப்பாக்கி முனையில் மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

மரபு ரீதியான இராணுவமாக இருந்த புலிகள், இன்று அதை இழந்துவிட்டார்கள். வெறுமனே காடுகளில் மறைந்திருந்து சில கொரில்லா தாக்குதல்களை நடத்த மட்டுமே அவர்களால் இனி முடியும்.அவர்களது விமானப்படை ஓடுதளம் அத்தனையும் கைப்பற்றப்பட்டுவிட்டன. இனி அவர்களால் வான் படையை இயக்கமுடியாது. சாலை என்ற கடற்படை முகாமையும் கைப்பற்றி விட்டதால், அவர்களால் கடல் பகுதியிலும் எந்தத் தாக்குதலையும் செய்யமுடியாது. மூன்று மாதங்களுக்குத் தேவையான உணவுப்பொருள், எரிபொருட்கள் தான் அவர்களிடம் இருக்கிறது. அத்தனை சக்திகளையும் இழந்துவிட்டார்கள். இப்படி தினம்தோறும் செய்திகள் வந்துகொண்டேயிருக்கின்றன.

"புலிகளால் இனி எழுந்திருக்க முடியாது. அவர்களது கதை முடிந்துவிட்டது" என்கிறார் இலங்கை இராணுவத் தளபதி சரத் பொன்சேகா.

'கடல் மார்க்கத்தின் அத்தனை வழிகளும் அடைக்கப்பட்டு விட்டன' கடலில் விழுவதைத்தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை என்று கடற்படைத் தளபதி வசந்த கருணாகொட கூறுகிறார்.

புலிகள் ஆயுதத்தை கீழே போடும் வரை போர் நிறுத்தம் கிடையாது. இன்னும் சில நாட்களில் எங்களது எண்ணம் நிறைவேறும் என்று மகிழ்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

அத்தனைக்கும் அதிர்ச்சி வைத்தியம் கொடுப்பது மாதிரி கொழும்புக்குள் வான்படையைச்



செலுத்தி மிரள வைத்துள்ளார்கள் புலிகள். ரூபன், சிரித்திரன் ஆகிய இரண்டு போராளிகள் இதில் இறந்துபோனார்கள். நான்கு மாதங்களுக்கு முன்னால் புலிகளின் வான்படை இதுபோன்ற ஒரு தாக்குதலை நடத்தியது. எனவேதான் அவர்களது விமானங்களை எப்படியாவது அழிக்க வேண்டுமென்று இராணுவம் எத்தனையோ முயற்சிகளை எடுத்தது.அத்தனையும் வீண் என்பதை கடந்த வெள்ளிக்கிழமை தாக்குதல் வெளிச்சப் படுத்தியிருக்கிறது. இவை ஒரு பக்கம் இருந்தாலும் இன்னொரு பக்கத்தில் இதே நபர் கள் சொல்லிவரும் கருத்துக்கள் பலத்த சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

எனக்கு இன்னும் ஓர் ஆண்டு அவகாசம் தரப்பட்டுள்ளது என்று மெதுவாக ஆரம்பித்திருக்கிறார் இலங்கை இராணுவத் தளபதி சரத் பொன்சேகா. அதற்கு மேலாக புலிகளில் இருந்து பிரிந்து சென்று அரசுடன் இணைந்துள்ள கருணா, புலிகளை ஒடுக்கி, முழுவதும் இராணுவக் கட்டுப்பாட்டுக்கு வர இன்னும் 18 மாத காலம் ஆகலாம் என்று கண்டுபிடித்திருக்கிறார். இலங்கை அரசாங்கம் சொன்னபடி பார்த்தால், அவர்கள் புலிகள் அனைவரையும் ஒழித்துவிட்டு, கடந்த நான்காம் திகதியுடன் இரண்டாவது சுதந்திர தினத்தை கொண்டாடியிருக்கவேண்டும். மாறாக ஓர் ஆண்டு காலம் ஒதுக்கியிருக்கிறார்கள். இப்படிக் காலத்தை தள்ளிப்போட விடுதலைப்புலிகளின் ஆக்ரோஷமான எதிர்த் தாக்குதல்தான் காரணமாக இருக்கமுடியும்.

பொதுவாக தங்களின் சிறு அசைவுகளையும் முறியடிப்புக்களையும் மக்களுக்கு வெளிப்படுத்தி வந்த புலிகள் இப்போது அடக்கி வாசிப்பது, அவர்கள் பற்றிய சந்தேகங்களை கிளப்பியுள்ளது. புலிகளின் ஆதரவாளர்களே சோர்ந்து போய் இனி நல்ல செய்து வராதா என்ற ஏக்கத் தோடு வலம் வர ஆரம்பித்தார்கள்.ஆனால் உண்மை வேறுமாதிரியாகவே இருக்கிறது. புலிகளின் வியூகங்களால் மிரண்டு சிங்கள இராணுவம் உடைந்து போயிருப்பதாக தகவல்கள் வர ஆரம்பித்துள்ளன. இன்னும் சில அங்குலம் நிலத்தை இழந் தால் கூட தலை தப்புவது சிரமம் என்பதால் கடைசிக்கட்ட கோபத்தை புலிகள் காட்டிவருகிறார்களாம்.அவர்களது வியப்பூட்டும் வியூகம், விறுவிறுப்பான வேகம், அச்சுறுத்தும் அமைதி மூன்றும் தான் இன்று புலிகளுக்கு கைகொடுத்து வருகிறதாம். சமீபத்தில் வெளியான சில தகவல்கள் அதிர்ச்சியைக் கிளப்புகின்றன.

### மௌனம் ஏன்?

கடந்த ஆண்டு புலிகளுக்கு உண்மையில் கஷ்டகாலம். அவர்கள் கையிலிருந்த பரந்தன் ஆனையிறவு, கிளிநொச்சி உள்ளிட்ட முக்கிய நகரங்களை இழந்தார்கள். இந்தப்போரை ஆரம்பித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா புதிய உத்தியைச் சொல்லிக்கொடுத்தார். இதுவரை அவர்கள் வைத்திருந்ததை நாம் பறித்தோம். பின்னர் அவர்கள் பறித்தார்கள். நாம் மறுபடியும் பறிக்கிறோம். இப்படியே போனால் ஆட்டம் நிற்காது. இன்னும் 30 வருடத்திற்குத் தொடரும்.எனவே முதலில் புலிகள் அமைப்பின் ஆள்பலத்தைக் குறைக்க வேண்டும். அதைச் செய்யாமல் அந்த அமைப்பை ஒழிக்கமுடியாது என்று சொன்னார். அதற்கான திட்டத்தை இராணுவத் தளபதி சரத்பொன்சேகா போட்டார். அதாவது ஒவ் வொரு இடமாகப் போய் சும்மா தாக்குதல் நடத்தி விட்டு பின்வாங்குவது, ஒவ்வொரு தாக்கு தலிலும் 10,20 என்று இறந்தால் ஒரு வருடத்தில் மொத் தத்தையும் முடித்து விடலாம் என்று திட்டமிட் டார்கள். இலக்கே இல்லாமல் குண்டுகளைப் பயன்படுத்தியது இதனால் தான்.

இதையே கொஞ்சம் மாற்றி யோசித்தார்கள் புலிகள். இடத்தை எப்போது வேண்டுமானாலும் கைப்பற்றிக் கொள்ளலாம். போராளிகள் தான் முக்கியம். அவர்களில் யாரையும் இழக்கக் கூடாது. எனவே பின்வாங்கலாம் என்று புலிகளின் தலைவர் பிரபாகரன் முடிவெடுத்தார். எனவே தான் பல இடங்களை விட்டு வர ஆரம்பித்தார்கள். அப்போதும் சும்மா பின்வாங்காமல் எதிர்த் தாக்குதலை சில நாட்கள் நடத்துவார்கள். புலிகள் சண்டையைத் தொடங்கிவிட்டார்கள் என்று படை வீரர்களை ஒரே இடத்தில் குவிக்க ஆரம்பித்ததும் அங்கு தாக்குதலை அதிகப்படுத்து வார்கள்.

பின்னர் எந்தச் சத்தமும் இல்லாமல் பின்வாங்கி வேறு பகுதிக்கு இடம்பெயர்வார்கள். இந்தத் தாக்குதல்கள் தான் கடந்த ஐந்து மாதங்களாக நடந்திருக்கின்றன. "சொற்ப இழப்பு. குறைந்த வெடிபொருட்களைப் பயன்படுத்துவது, இலக்கை மட்டுமே அடிப்பது, இராணுவத்தினரை கொல்வது,ஆயுதங்களைக் கைப்பற்றுவது" ஆகிய ஐந்து கட்டளைகள் தான் பிரபாகரன் தனது தளபதிகளுக்கு இட்டுள்ள பஞ்சசீலம்.

இலங்கை நாடாளுமன்றத்தில் சில நாட்களுக்கு முன் ஒரு புள்ளி விபரம் படிக்கப்பட் டுள்ளது. அதில் கடந்த ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மூன்று மாதங்களில் மட்டும் 3 ஆயிரம் இராணுவத்தினர் உயிரிழந்திருப்பதாகவும், 12 ஆயிரம் பேர் பலத்த காயமடைந்து உடல் ஊன முற்றதாகவும் கூறப்பட்டுள்ளது. புலிகள் சும்மா இருந்தால் இவ்வளவு சேதம் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை.


பல கிலோ மீற்றர் பகுதிகளை அவர்கள் இழந்துள்ளது உண்மைதான்.ஆனால் தளபதிகள், போராளிகள் , ஆயுதங்கள்,பீரங்கிகள், கப்பல்களை இழக்காமல் பழைய பலத்துடன் அவர்கள் அப்படியே இருக்கிறார்கள்.

### மறைப்பது எதற்கு?

மிகப் பெரிய தாக்குதலை சேதாரம் இல்லாமல் புலிகள் நடத்தி முடித்திருக்கிறார்கள் என்பதை தன்னையறியாமல் ஒப்புக்கொண்டிருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. சிங்களப் பத்திரி கைக்கு அவர் கொடுத்த பேட்டியில் பெப்ரவரி முதல் நான்கு நாட்கள் எங்கள் படைக்கு பெரிய இழப்புகள் தான் என்று அவர் சொல்லியிருக் கிறார்.

அதாவது பெப்ரவரி முதலாம் திகதி முதல் தொடர்ந்து 72 மணி நேரம் புலிகள் தங்கள் தாக்குதலை நடத்தி இருக்கிறார்கள். நாங் கள் தற்காப்புத் தாக்கு தல் தான் நடத்துகி றோம் என்று சொல்லி வந்த புலிகள் முதல் தடவையாகத் தாக்கு தலை அவர்களா கவே தொடங்கினார்கள்.

புதுக்குடியிருப்புப் பகுதியை நோக்கி முன்னேறுவதற்கான ஏற் பாட்டில் இராணு வம் மும்முரமாக இருந் தது. 59 ஆவது படை யணியின் தளபதி பிரிகேடி யர் நந்தன உட வத்த இதற்குத் தலை மை தாங்கினார். உடையார் கட்டுப் பகுதியில் 62 ஆவது பிரிவும் இருந்தது. புலிகள் 59 ஆவது படையை வளைத்துத் தாக்குதலை நடத்தியது. முள்ளியவளை, ஒட்டு சுட்டான், புதுக்குடியிருப்பு தெற்கு ஆகிய மூன்று இடங்களிலும் முக்கோண மாகச் சுற்றித் தாக்குதலை நடத்தினார்கள். ஆட்லறி மோட் டார் மூலம் ஷெல் அடித்தார்கள். ஒரு நாள் முழுவதும் அடித்த அடியில் இராணுவம் பின் வாங்கியது.



இது ஒரு பக்கம் நடக்கும் போதே "வற்றாப் பளைக்கும் கோப்பாய்புலாவுக்கும் இடையில் புலி களின் படை கடலில் இறங்கியிருக்கிறது. அவர்கள் இராணுவத்தைப் பின்னால் இருந்து வளைத்துள்ளார்கள். இதில் இராணுவத்தின் பல்வேறு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. அழிக்கப்பட்டன. அதன் பின்னர் தான் படை பின்வாங்கியிருக்கிறது. 150 இராணுவத்தினர் பின்னர் கொல்லப் பட்ட தாகவும் இரண்டு லொறிகள் நிறையத் துப்பாக்கி களைப் பறித்ததாகவும் புலிகள் சொன்னார்கள். போர் டாங்கிகள், கவச வாகனங்கள், டிரக் வண்டிகள் எனப் பலவற்றையும் புலிகள் கைப்பற்றினார்கள்.

ஆனால் 59 ஆவது படையணியின் 3 ஆவது டிவிஷன் மொத்தமாக அழிந்ததாகக் கொழும்பில் உண்மைத் தகவல் பரவி, இராணுவத்தினரின் குடும்பத்தினர் கூடிவிட்டார்கள். பின்னர் அன்று முதல் இராணுவத்தை முன்னேறவிடாமல் கடுமையான தடுப்பரண்களைப் புலிகள் போட்டு வைத்துள்ளனர். இராணுவத்தின் குண்டு வீச்சில் நூற்றுக் கணக்கான தமிழர்கள் தினமும் இறந்து வரு வதைப் பார்த்து உலக மெங் கும் அனுதாப நிலை ஏற்பட்டுள் ளது. இந் தச் சமயத்தில் தங்களது பல மான தாக் குதல்கள் வெளியில் தெரிந்தால் அது அனு தாப அலையின் வீச் சைக் குறைத்து விடும் என்று நினைக் கிறார்கள்." எனவே தான் தாக்கு தலை யும் நடத்திக் கொண்டு அது வெளியில் பரவாமலும் வைத்துள் ளார்கள். இது ஒரு வகையான அரசியல் தந்திரம் என்று சொல்லப்படுகிறது. அது இராணுவத்துக்கும் தெரியும். ஊருக்குத் தெரியாமல் ஊமை மக்காயமாகவே இருக்கட்டும்என்றுநினைக் கிறது இராணுவம்.

### எதிர்கொள்வது எப்படி?

இன்றைய நிலவரப்படி ஆனையிறவுக்குத் தென்கிழக்கே முள்ளியான், செம்பியன்பற்று, கட்டைக்காடு, சுண்டிக்குளம் பகுதிகளில் தான் புலிகள் இருக்கிறார்கள். இதையும் கைப்பற்றிய பின்னர் தான் இராணுவத்தால் முல்லைத்தீவை நெருங்க முடியும். இந்த நான்கு ஊர்களைக் கைப்பற்றினால் தான், ஏ - 35வீதி (பரந்தன் முதல் முல்லைத்தீவு வரை), ஏ - 34 (மாங்குளம் முதல் முல்லைத்தீவு வரை) ஆகிய இரண்டு வீதிகளுக்குள் புலிகளை முடக்கமுடியும். ஏ-9 என்ற பாதையை இராணுவம் வைத்திருப்பது தான் புலிகளுக்குப் பெரிய சிக்கல். இதைத் தாண்டிய பகுதிக்குள்தான் மூன்று இலட்சம் மக்கள் இருக்கிறார்கள். பொது மக்களை வெளியேற்றாமல் இராணுவத்தால் எதுவும் செய்ய முடியாது.

இராணுவத்தின் எட்டு படையணிகள் இந்த பகுதியைச் சுற்றி நிறுத்தப்பட்டுள்ளன. இதில் சுமார் 50 ஆயிரம் பேரை இறக்கியிருக்கிறேன் என்று இராணுவத்தளபதி பொன்சேகா சொல்லியிருக் கிறார். புதுக்குடியிருப்பைக் கைப்பற்றுவது தான் அடுத்த இலக்கு. இருபதுக்கும் மேற்பட்ட வரை படங்களை வைத்துப் படை நடத்திய எனக்கு இந்த சின்ன வரைபடத்தை எம்மாத்திரம்? என்று சொல்லியிருக்கிறார் அவர். அந்த அளவுக்கு புதுக் குடியிருப்பு சின்னப்பகுதி. ஆனாலும் மூன்று வாரங்களாக இராணுவம் அந்த இடத்தில் திணறிக் கொண்டுதான் இருக்கிறது. பொதுவாக காட்டுக்குள் இருந்துகொண்டு இராணுவத்தைத் தாக்குவார்கள் புலிகள். ஆனால் இம்முறை புதுக்குடியிருப்பு நகர் பகுதியை அவர்கள் வைத்துக்கொண்டு, காட்டுக் குள் இராணுவத்தை நுழைய விட்டுள்ளார்கள். புலிகள் எப்போதும் நள்ளிரவு நேரங்களில் தான் தாக்குதலை ஆரம்பிப்பார்கள். ஆனால் இப்போது பகல் நேரங்களில் தான் தாக்குதலை நடத்து கிறார்களாம். எனவே புதுக்குடியிருப்பைத் தாண்டி இன்னும் பல எல்லைகளைத் தாண்டிய பின்னர் தான் முல்லைத்தீவுக்கு இராணுவம் வரமுடியும்.

மொத்தம் 600 புலிகள் தான் இருப்பதாக இராணுவம் சொல்கிறது. ஆனால், புலிகள் ஆதரவு இணையத்தளங்கள் 15 ஆயிரம் பேர் என்கின்றன. கடந்த மூன்றாண்டுகளாக அங்குள்ள மக்கள் அனைவருக்கும் பயிற்சி கொடுத்தார்கள். மூன்று இலட்சம் மக்களில் 10 சதவீதம் பேர் போர்ப் பயிற்சி பெற்றவர்கள் என்று வைத்துக் கொண்டாலும் 30 ஆயிரம் பேர் தற்காப்பு யுத்தத்துக்குத் தயாராக இருப்பார்கள். அட இந்த எண்ணிக்கையையும் சேர்த்து 45 ஆயிரம் பேர் ஆயத்தமாக இருப்ப தாகக் கூறப்படுகிறது. இராணுவ முகாம்களைத் தேடிச் சண்டையிடுவதை விட அவர்களை தங்கள் இடத்துக்கு வரவழைத்து யுத்தம் நடத்துவதன் மூலம் பஞ்சசீல இலக்கை அடையலாம் என்பது புலிக ளின் கணக்கு.

தரைப்படைக்கு அடுத்த முக்கியத்துவம் கடற்புலிகளுக்குத்தான் இனி இருக்கும். அனைத்துலக கப்பல் மற்றும் காப்புறுதி நிறுவனத்தின் கணக்குப்படி புலிகளிடம் 15 கப்பல்கள் இருக்கின்றன. இவை பல நாடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. வாடகைக்கும் எடுத்துப் பயன்படுத்தி வருகிறார்கள். வர்த்தகத்தைத் தாண்டிய ஆயுதப் போக்குவரத்துக்கும் இது பயன்படுகிறது. 400க்கும் மேற்பட்ட அதிவேகப் படகுகள் இருக்கின்றன. இரண்டு மாதங்களுக்கு முன்னால் முல்லைத் தீவு கடல் பகுதியில் புலிகள் தப்பிவிடாமல் இருக்க 25 இற்கு மேற்பட்ட அதி விசேட படகுகளை இலங்கை கடற்படை நிறுத்தியிருந்தது.

ஆனால் கடற்புலிகளின் லெப்டினனட் பதி தலைமையில் எதிர்த்தாக்குதல் நடத்திக் கலைத்ததில் கடற்படை இப்போது நடுக்கடலில் நிற்கிறது. முல்லைத்தீவு முதல் வடமராட்சி கிழக்கு வரை 40 கி.மீ தூரக் கடற்கரைப் பகுதி புலிகளிடம் இருந் தது.



படங்கள்:-பாதுகாப்பு அமைச்சு

இப்போது 20 கி.மீதான் உள்ளது. சண்டைக்கான ஆயத்தங்களை இரண்டு தரப்புமே இங்கு தான் செய்து வருகின்றன.

ஆறு விமானங்கள் புலிகள் வசம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. கடந்த வெள்ளிக் கிழமை இரண்டு வீழ்த்தப்பட்டுள்ளது. பொதுவாக விமானங்களைக் குறிவைப்பதை விசேட தாக்குதலாக புலிகள் சொல்வார்கள்.

புலிகளின் வான் படைத் தாக்குதல்கள் கொரிய பாணியைப் பின்பற்றுகின்றன. அமெரிக்கா வும், தென்கொரியாவும் சேர்ந்து அதி உயர் இராணுவ உத்திகளைப் பயன்படுத்திய போது , வடகொரிய சிறுவிமானங்களை வைத்து அமெரிக்காவை அச்சுறுத்தியது. அதைத்தான் புலிகள் செய்துகொண்டு இருப்பதாகப் போர் ஆய்வாளர்கள் சொல்கிறார்கள்.



# Lifeline மீண்டும் வாழ்வோம்

இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்

Humanitarian Information For IDPs

## வவுனியாவில் கல்வியை தொடரும் வன்னி மாணவர்கள்

வன்னியில் நிலவும் போர்ச்சூழல் காரணமாக காயமடைந்தவர்களை சிகிச்சைக்காக திருகோணமலைக்கு அழைத்து வரும் பணியில் ICRC ஈடுபட்டு வருகின்றது. வன்னியிலுள்ள புதுமாத்தளன் பகுதியிலிருந்து பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை நோயாளிகள், காயமடைந்தவர்கள் மற்றும் பராமரிப்பதற்காக வந்த உறவினர்கள் என மொத்தமாக ஆயிரத்து 185 பேர் இவ்வாறு ICRC யினால் திருகோணமலைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்கள் திருகோணமலை, கந்தளாய், கண்டி மற்றும் கொழும்பு ஆகிய வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களுக்கான சிகிச்சைகளை வழங்க இலங்கை மருத்துவர்கள் சங்கம் வாரந்தோறும் 20 வைத்தியர்களை வவுனியாவிற்கு அனுப்பவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அவ்வமைப்பின் பேச்சாளர் வைத்தியகலாநிதி உப்புல் குணசேகர அவர்களை வினவிய போது அங்குள்ள மக்களுக்கு சுவாசநோய், தோல்வியாதி மற்றும் சிறுவர்கள் குழந்தைகளிடையே போசாக்குக் குறைபாடு காணப்படுகிறது. இவற்றை நாம் இனங்கண்டுள்ளோம். இவற்றைத் தடுப்பதற்கான முயற்சிகளையே மேற்கொண்டு வருகின்றோம் என்றார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகளை நிறைவேற்ற பொது மக்கள், தனியார் மருந்துவமனைகள் மற்றும் மருந்து வழங்கல் நிறுவனங்கள் ஆகியவற்றிடம் தம்மாலான உதவிகளை வழங்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியா மனிக்பாமில் தங்கியுள்ள மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதைப் படத்தில் காணலாம்.

நோய் எதிர்ப்பு மருந்துகள், சுவாச நோய்களுக்கான மருந்துகள், பிள்ளைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மாருக்கான விற்றமின்கள் என்பனவற்றிற்கான தேவைப்பாடு நிலவுகின்ற காரணத்தினால் அவற்றை வழங்குவதற்கும் மேலதிக உதவிகளை வழங்குவதற்கும் ஆர்வமுள்ளவர்கள் 0714999555 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள். இதேவேளை காயமடைந்தவர்கள் பலர் திருகோணமலைக்கு மேலும் அழைத்து வரப்பட்டுள்ளதாக ICRC யினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது வவுனியா மாவட்டத்தில் 13 முகாம்களில் அண்ணளவாக 31 ஆயிரத்து 668 இடம் பெயர்ந்தவர்கள் உள்ளனர். நலன்புரி நிலையங்களினுள்ளே சமைத்த உணவு வழங்குவதற்கு ஏற்பாடுகளை செய்வதற்கான பரீட்சார்த்த நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாக மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் ஹலீமன் தெரிவித்தார்.

அரசாங்க அதிபா இடம் பெயர்ந்த மக்களுக்குத் தேவையான உணவை அவர்கள் தங்கியுள்ள முகாம்களிலேயே சமைத்து வழங்குவதற்கான ஏற்பாட்டினைச் செய்திருக்கின்றார். பரீட்சார்த்தமாக ஒரு முகாமில் செய்து பார்த்து அது வெற்றி யளிக்கும் பட்சத்தில் ஏனைய முகாம்களிலும் நடைமுறைப்படுத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என ஹலீமன் மேலும் தெரிவித்துள்ளார்.

மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை வழங்குவதில் முனைப்புக் காட்டி வரும் அதிகாரிகள், கல்வி செயற்பாட்டிலும் அதிக அக்கறையுடன் உள்ளனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமே.

தற்பொழுது 650 மாணவர்கள் மனிக்பாம் முகாமில் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் அவர்களின் ஆரோக்கியம் தொடர்பில் அதிக அக்கறை காட்டப்படுவதாகவும் வவுனியா வலயக்கல்விப் பணிப்பாளர் ரஞ்சனி ஒஸ்வெல்ட் தெரிவித்தார். UNICEF அமைப்பானது கற்றல் செயற்பாடுகளுக்குத் தேவையான பாடசாலை உபகரணங்களை வழங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

வன்னியிலுள்ள மக்கள் தொடர்ந்தும் உணவுப் பொருட்கள் கிடைக்கப் பெறும் என்ற நம்பிக்கையில் வாழ்ந்து வருகின்றனர்.



மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியானது சூரியன் எவ்.எம். வானொலியூடாக சனிக்கிழமை களில் காலை 6 மணிமுதல் 8 மணி வரையும் கிழக்கு மாகாணத்தில் பிறை எவ்.எம். வானொலியூடாக (F.M. 102 Mhz) ஞாயிற்றுக்கிழமைகளில் பி.ப. 1.30 மணி முதல் 2 மணி வரையும் புத்தளப் பிரதேசத்தின் அநுார் எவ்.எம் ஊடாக ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை 6.45 முதல் 7.15 மணி வரையும் எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை (WWW.Internews. lk.Radio. Voices of peace.lk) என்ற இணையத்தளத்திலும் கேட்கலாம்.

## "மக்கள் பாடசாலைகள், பொதுக்கட்டிடங்களில் நீண்ட காலம் தங்கியிருக்க முடியாது"

### மீள்குடியேற்ற இடர் முகாமைத்துவ அமைச்சர் ரிஷாட் பதியுதீன்



மீள் குடியேற்ற இடர் முகாமைத்துவ அமைச்சர் ரிஷாட் பதியுதீன்

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளர் ஜோன் ஹோம்ஸ் கடந்த 20 ஆம் திகதி வவுனியாவிற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். இவரது விஜயம் குறித்து மேலதிகத் தகவல்களை அறிந்து கொள்ளும் நோக்கில் மீள்குடியேற்ற இடர் முகாமைத்துவ அமைச்சர் ரிஷாட் பதியுதீன் அவர்களை நேர்கண்டுளோம்.

**ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளர் ஜோன் ஹோம்ஸ் அவர்களின் வவுனியா விஜயம் பற்றி என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

நானும் ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜபக்சவும் அங்குள்ள பல முகாம்களுக்கு விஜயம் செய்தோம். அங்குள்ள மக்களுடைய நிலைமைகளையும் அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகளையும் நேரடியாகப் பார்வையிட சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அதேபோல அரசு அமைத்து வருகின்ற கதிர்காமம் நிவாரணக் கிராமம், ஆனந்தகுமாரசாமி நிவாரண கிராமம், ராமநாதன் நிவாரணக் கிராமம், அருணாசலம் நிவாரணக் கிராமம் ஆகிய நான்கு இடங்களுக்கும் விஜயம் செய்திருந்தார்கள்.

**அங்குள்ள மக்களுக்கு எவ்வாறான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கின்றன?**

தண்ணீர், மலசலகூடம், இருப்பிடம், பாடசாலை, தொழில் நுட்பக்கல்வி போன்றவை வழங்கப்பட்டுள்ளன. அவற்றை பார்வையிட்ட அவர் மிகவும் சந்தோசமடைந்தார். அதைப் போல் மக்கள் தற்காலிகமாகத் தங்கவைக்கப் பட்டுள்ள 12 இடங்களில் ஒரு இடத்திற்கு அதாவது காமினி மகா வித்தியாலயத்திற்கு அவர்கள் சென்று பார்வையிட்டார்கள். அங்குள்ள மக்களோடு அவர் தனிப்பட்ட முறையில் கலந்துரையாடினார். அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டார்.

**அரசாங்க அதிகாரிகளோடு அங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மனிதாபிமானப் பணிகள் தொடர்பாக ஜோன் ஹோம்ஸ் கலந்துரையாடல் எதனையாவது நடத்தியிருந்தாரா?**

வவுனியா அரசாங்க அதிபர் திருமதி சார்ள்ஸ் தலைமையில் அகதிகள் சம்பந்தப்பட்ட விடயங்களை ஒவ்வொரு தலைப்பாக நாங்கள் ஆராய்ந்தோம். இருக்கின்ற பிரச்சினைகளை அந்தந்த பொறுப்பதிகாரிகள் தெளிவாக எடுத்துரைத்தார்கள்.

**வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளர்களை அவர் சென்று பார்வையிட்டதாக அறிகின்றோம். அது தொடர்பில் ஏதாவது கூற முடியுமா?**

அங்கு கால் கைகளை இழந்து தவிக்கின்ற மக்களை நேரடியாகப் பார்வையிட்டு அவர்களுக்கு வழங்கப்படுகின்ற வைத்திய சேவைகளையும் அவர்களது கருத்துக்களையும் நேரடியாகக் கேட்டு அறிந்து கொண்டார். ஐ.நா பிரதிநிதிகள் மாத்திரம் இறுதி கூட்டம் ஒன்றை நடத்தினார்கள். ஆகவே நாங்கள் அவர்களிமிருந்து விடை பெற்றோம்.

> அத்தனை நோயாளிகளும் தங்களுடைய குடும்பத்தை தங்களுடன் சேர்த்துவைக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன் வைத்தார்கள். அதேவேண்டு கோளையே முகாம்களில் உள்ள மக்களும் விடுத்தனர்.

**எத்தகைய விடயங்களில் மேலதிக முன்னேற்றங்கள் காணப்பட வேண்டும் என்று ஜோன் ஹோம்ஸ் உங்களிடம் சுட்டிக் காட்டினார்?**

தற்காலிகக் கொட்டில்களில் தங்கியிருக்கின்ற மக்களை உடனடியாக நிவாரணக் கிராமங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்ற விருப்பத்தை வெளியிட்டார். அம்மக்களும் பாடசாலைக் கட்டிடங்களிலும் பொதுக் கட்டிடங்களிலும் நீண்ட காலம் தங்கியிருக்க முடியாது. எனவே அதற்கான ஏற்பாடுகளை நாங்கள் செய்து வருகின்றோம்.

**இடம்பெயர்ந்துள்ள மக்கள் எவ்வாறான உணர்வுகளை ஜோன் ஹோம்ஸிடம் வெளிப்படுத்தினார்கள்?**

அதிகமான மக்கள் தங்களுடைய உறவினர்களை வன்னியில் விட்டு விட்டு வந்திருக்கின்றார்கள். அத்தனை நோயாளிகளும் தங்களுடைய குடும்பத்தை தங்களுடன் சேர்த்து வைக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தார்கள். அதே வேண்டு கோளையே முகாம்களில் உள்ள மக்களும் விடுத்தனர்.

**உங்கள்எண்ணங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்**

மீண்டும் வாழ்வோம்
தொடர்பான உங்கள்
மேலான எண்ணங்களையும்
படைப்புக்களையும் எதிர்பார்க்கிறோம்
நீங்கள் ஓவியம் வரையும் ஆற்றல் மிக்கவர் எனில்
உங்கள் அனுபவங்களை சித்தரிக்கும் ஓவியங்களை
வரைந்து எமக்கு அனுப்பி வையுங்கள்
அவற்றை மீண்டும் வாழ்வோம்
பகுதியில் பிரசுரிக்க காத்திருக்கிறோம்.

த.பெ.இல.1039 கொழும்பு
தொ.பே. -0774952242
மின்னஞ்சல்-info@lifeline srilanka.com

**மீண்டும் வாழ்வோம்**

''மீண்டும் வாழ்வோம்'' திட்டமானது இலங்கையின் அசாதாரண சூழ்நிலைகளினால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்காகவும் மீள்குடியேறி உள்ள வர்களுக்காகவும் தகவல்களை வழங்கும் பரந்து பட்ட மனி தாபிமான செயற்றிட்ட அமைப்புக்களின் ஓர் அங்கமாகும்.

மனிதர்கள் எப்படிப்பட்டவர்கள் – என்பதை காட்டுவது துன்பங்களே.

– கிரீஸ்

வலம்புரி

## மனதைப் பிழிந்தெடுக்கும் மாணவியின் தற்கொலை

முல்லைத்தீவிலுள்ள தனது பெற்றோர்களுடன் தொடர்பு கொள்ள முடியாத வேதனையில் கிழக்குப் பல்கலைக்கழக மாணவியொருவர் தற்கொலை செய்துள்ளார்.

மனிதத்தை வதைக்கக் கூடிய இந்தத் துயரச் சம்பவம் குறித்து சில நிமிடங்களேனும் நாம் சிந்திப்பது அவசியமாகும்.

படித்துப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான பிரஸ்தாப மாணவி கிழக்குப் பல்கலைக் கழகத்தில் தனது பட்டப்படிப்பைத் தொடர்ந்தார்.

இந்நிலையில் வன்னிப் பெருநிலப்பரப்பில் மூண்ட பெரும் யுத்தம் அந்த மாணவியை அவரின் பெற்றோரிடமிருந்து பிரித்துக் கொண்டது.

முல்லைத்தீவில் போரில் சிக்குண்ட தனது தாய், தந்தையர், சகோதரங்கள் என்ன ஆனார்களோ என்பதை அறியமுடியாத அந்த மாணவி, தனது சோகத்தை –துயரத்தை –மன வேதனையை கடிதத்தில் எழுதி வைத்துவிட்டு தற்கொலை செய்துகொண்டார்.

இந்த விடயம் சாதாரணமானதல்ல. இதே போன்ற வேதனையை மனதில், சுமந்த வண்ணம் வெளியில் சொல்லவும் –மெல்லவும் முடியாத எத்தனையோ பேர் நம் மத்தியில் உள்ளனர்.

அவர்கள் இன்றுவரை தம் உறவுகளுக்காக கண்ணீர் வடித்த வண்ணம் உள்ளனர்.

நிம்மதியான உறக்கமில்லை. உண்பதற்கு மனமில்லை. இந்த வேதனையில் அகப்பட்டு பல மாதங்களாகியும் இன்னமும் முடிவு கிடைக்கவில்லை.

தமது உறவினர்களோடு ஒரு நிமிடமேனும் கதைத்து ஆறுதலடைய முடியாத அவலம் ஒருபுறம். நாள்தோறும் மக்கள் பலியாகிக் கொள்ளும் பயங்கரமான செய்திகள் மறுபுறமாக அவர்கள் படும் வேதனைக்கு அளவே இல்லாமல் உள்ளது.

இந்த நேரத்தில் நாம் அவர்களை ஆற்றுப் படுத்துவதும் ஆறுதல் வார்த்தை கூறுவதும் அவசியமாகும்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தற்கொலை செய்து கொண்ட மாணவிக்கு சரியான ஆறுதலும், நம்பிக்கையும் கிடைத்திருக்குமாயின் அவர் தனது முடிபை மாற்றியிருப்பாரே என்று ஏழை மனம் எண்ணிக் கொள்கிறது.

'ப்க்கத்திருப்பவர் துன்பத்தினை பார்க்கப் பொறாதவன் புண்ணியமூர்த்தி' என்ற பாரதியின் பாடல் வரிக்ளை எங்கள் நெஞ்சுகளில் ஏற்றிக் கொள்வோம்.

வேடிக்கை விளையாட்டுக்கள், கூத்தாட்டங்கள், கொண்டாட்டங்கள் இவை எல்லாவற்றையும் ஒருபுறம் ஒத்திவைத்துவிட்டு உறவுகளுக்காக கலங்கும் எங்கள் உறவுகளை ஆற்றுப் படுத்த ஆறுதல் வார்த்தை கூற நேரத்தை ஒதுக்குவோம்.

இதுவே நாம் செய்யும் மனித நேயம். இதனை செய்யத் தவறும் போதெல்லாம் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடந்த மனதைப் பிழியும் வேதனை தொடரவே செய்யும்.

# இலங்கைப் பிரச்சினையில் ஐ.நா. தலையிட்டால் அங்கத்துவத்திலிருந்து வெளியேற நேரிடும்

## ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை பலாத்காரமாக எமது பிரச்சினையில் தலையிட முனைந்தால் ஐ.நா. அங்கத்துவத்திலிருந்து வெளியேறி இலங்கை சுயாதீனமான நா டாக செயற்படும் தீர்மானத்தை எடுக்க வேண்டும். சுயாதீனமான நாடுகளை ஆக்கிரமித்து மனிதப் படுகொலைகளை மேற்கொள்ளும் அமெரிக்காவுக்கு எமது நாட்டுப் பிரச்சினையில் தலையிடுவதற்கு அதிகாரமில்லை என்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இலங்கைப் பிரச்சினைத் தொடர்பில் அமெரிக்க செனட் சபையில் ஆராயப்பட்டதுடன் ஐ.நா. போரை நிறுத்துமாறு வலியுறுத்தி வருவது தொடர்பில் ஹெல உறுமயவின் நிலைப்பாடு என்ன என்பதை தெளிவுபடுத்துகையிலேயே அதன் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான எல்லாவல மேதானந்ததேரர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது,

நாடில்லாது நாடோடிகளாகத் திரிந்தவர்கள் செவ்விந்தியர்களை விரட்டியடித்து பலாத்காரமான ரீதியில் அமெரிக்காவை உருவாக்கினார்கள். இவ்வாறானவர்கள் மனித உரிமைகளுக்கு குரல் கொடுப்பது கேலிக்கூத்தாகும்.

பல தசாப்தங்களாக எமது நாட்டில் அழிவுகளை ஏற்படுத்திய பயங்கரவாதத்தை அழித் தொழிக்கும் இறுதித்தருவாயில் நாமிருக்கின்றோம்.

இந்தச் சூழ்நிலையில் அமெரிக்கா எமக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தக் கூடாது அமெரிக்காவும் ஐ.நாவும் ஏனையநாடுகளும் அரசாங்கம் மேற்கொள்ளும் மனிதாபிமான நடவடிக்கைகளை கவனத்தில் கொள்ளவேண்டும் அதை விடுத்து இறையாண்மையுள்ள எமது நாட்டுப்பிரச்சினையில் பலாத்காரமாக தலையிட முனையலாகாது.

இராஜதந்திர ரீதியிலான அமெரிக்காவில் நட்புறவை வரவேற்கின்றோம். அதைவிடுத்து பலாத்காரத்தை பிரயோகிக்க முனைந்தால் ஒரு போதும் அடிபணியமாட்டோம்.

ஐ.நாவுக்கும் இதே செய்தியையே தெரிவிக்க விரும்புகிறோம். பலாத்காரம் பிரயோகிக்கப்பட்டால் ஐ.நா. அங்கத்துவத்தில் இருந்து வெளியேறி தனித்துவமான சுயாதீனமான இராச்சியமாக இலங்கையை பிரகடனப்படுத்தும் தீர்மானத்தை மேற்கொள்ளவேண்டும்.

(ஓ-5)

# இலங்கையில் உடனடிப் போர் நிறுத்தம் கோரி பெங்களூரில் 18 அமைப்புகள் இணைந்து போராட்டம்

(சென்னை)

இலங்கையில் உடனடியாக அரசு போரை நிறுத்த வேண்டும் இலங்கை அரசுக்கு இந்திய அரசு அளித்து வரும் போர் உதவியை நிறுத்த வேண்டும். விடுதலைப்புலிகள் மீதான தடையை இந்திய அரசு நீக்க வேண்டும். தமிழ் ஈழத்துக்கு ஆதரவு அளிக்க வேண்டும். போரால் பாதிக்கப்பட்ட இலங்கை தமிழர்களின் துயர் துடைக்கும் பணியை உடனே தொடங்க வேண்டும். ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி கர்நாடக தமிழ் மக்கள் இயக்கத்தின் சார்பில் பெங்களூரில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிரமாண்ட பேரணி நடத்தப்படவுள்ளது.

பெங்களூர் டவுன் ஹாலில் இருந்து பிற்பகல் 2 மணிக்கு புறப்படும் இந்த பேரணிக்கு கர்நாடக தமிழ்மக்கள் இயக்க தலைவர் ராஜன் தலைமை தாங்கவுள்ளார். மக்கள் உரிமை கழக தலைவர் அசன் மன்சூர் பேரணியை தொடங்கி வைக்கிறார். ம.தி.மு.க செயலாளர் வைகோ த.தே.கூ.எம்.பி. சிவாஜிலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

இந்தப் பேரணியில் விடியல் நூலக தோழர்கள், அகில இந்திய மனித உரிமை அமைப்பு, புரட்சி இளைஞர் முன்னணி ,அம்பேத்கார் தத்துவ தளம், திராவிடர் கழகம், பெரியார் திராவிடர் கழகம், விடுதலை சிறுத்தைகள், பொதுமக்கள் குழு, கர்நாடக தமிழர் முன்னேற்ற கழகம், ஐ.டி.ஐ.தமிழ் மன்றம், தமிழ் தேசிய களம், தமிழர் சேனை, பெங்களூர் பொது நலச் சங்கம், கர்நடாகம் மாநில சிவாஜிகணேசன் ரசிகர் மன்றம், கமலஹாசன் நற்பணி மன்றம், ரஜினிகாந்த் நற்பணி மன்றம், விஜய் ரசிகர் மன்றம், அஜித் நற்பணி மன்றம், உள்பட ஏராளமான அமைப்புகள் கலந்து கொள்கின்றனர். (ஓ–5)

## பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்கான நேர்முகப்பரீட்சைக்கு தோற்றாதவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

தேசிய பாடசாலைகளில் பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்கு இது வரை தோற்றாதவர்களுக்கு மார்ச் மாதம் 2ஆம் திகதி இந்நேர்முகப் பரீட்சை நடத்தப்படவுள்ளதால் சகல ஆவணங்களுடனும் அவற்றின் பிரதியுடனும் யாழ். மேலதிக மாகாணக்கல்விப்பணிப்பாளர் பணிமனைக்கு சமூகமளிக்குமாறு யாழ். மேலதிக கல்விப்பணிப்பாளர் வே. தி. செல்வரட்ணம் கேட்டுக்கொள்கின்றார்.

இதுவரை நேர்முகப்பரீட்சைக்கு தோற்றாதவர்கள் விபரம் வருமாறு,

எஸ்.ரதி – இளவாலை, பி.பிரதீபன்– யாழ்ப்பாணம், எம்.பிரியந்தி–கோப்பாய், எஸ்.லம்போதரன்–அல்வாய், த.ககேந் திரன் –கிளிநொச்சி, என்.சர்மிலா–முல்லைத்தீவு, ரி.துசிகரன்– சாவகச்சேரி, ஆர். துஷ்யந்தி–யாழ்ப்பாணம், ஏ.தாமரைச் செல்வி–பண்டத்தரிப்பு, வி.வாமன் –அல்வாய், கே.தங்கராஜா – புலோலி, எஸ்.சுபாகரன்–சுன்னாகம், என்.நளாயினி–சித்தாண்டி, எஸ். ஜெயகுமாரன்–வட்டுக்கோட்டை, ஜே.அரிய தாஸ்–ஆனைக்கோட்டை, ரி.நகுலன்–அச்சுவேலி, எஸ். சிவலோக நாயகி–சுன்னாகம்.

(ஓ)

## யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் சிரமம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் பிராந்திய இணைப்பாளரின் தொடர்புகள் இல்லாமையால் நிர்வாக சிக்கல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

யாழ். மனித உரிமைகள்ஆணைக்குழுவின் இணைப்பாளராக கடமையாற்றிய இணைப்பதிகாரி இறுதியாக 2008 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை பணிபுரிந்தவராகவும் 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி 07 ஆம் திகதி வரை வைத்திய விடுமுறை விண்ணப்பப் படிவம் யாழ். அலுவலகத்திற்கு தபால் மூலம் கிடைக்கப்பட்டதாகவும் இது வரை எந்தத் தொடர்பாடலும் இல்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பதிகாரி இல்லாமையினால் யாழ். அலுவலக செயற்பாடுகளை முன்னெடுப்பதில் சிரமங்கள் எதிர்நோக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக அங்கு பணியாற்றும் அதிகாரிகளுக்கு மேலதிக நேர கொடுப்பனவுகள் , வாகனப் பயன்பாடுகள் போன்றவற்றை பெற்றுக்கொள்ளமுடியாதுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ். குடா நாட்டில் இடம்பெற்று வரும் கொலைகள், கடத்தல்கள், காணாமல் போதல், சரணடைதல் போன்ற சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்வதுடன் அதற்குரிய நடவடிக்கைகளையும் இந்த அலுவலகம் எடுத்து வந்தது.

தற்போது இணைப்பதிகாரி இல்லாமையில் மனித உரிமை ஆணைக்குழுவின் செயற்பாடுகள் நம்பகத் தன்மை இல்லாது இருப்பதாகவும் முறைப்பாட்டாளர்களின் விளக்கங்கள் பிற் போடப்பட்டு வருவதாகவும் முறைப்பாட்டாளர்களால் குற்றஞ் சாட்டப்பட்டு வருகிறது.

யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்திற்கு ஆளணி பற்றாக்குறை, வாகனப் பற்றாக்குறைகள் காணப்படுவதுடன் ஓரளவு கடமைகள்செய்து வரப்பட்ட போதும் தற்போது இணைப்பதிகாரி இல்லாத நிலையில் மூன்று மாதங்களாக அலுவலகம் இயங்கி வருகிறது. (ஓ–5)

## தவக்காலப் பொழிவு

### மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள்



இறைவனின் மீட்புத் திட்டத்தை நிறைவேற்ற மனுவுரு எடுத்த இயேசு முப்பது வயது வரை பெற்றோருக்கும் இறைவனுக்கும் ஏற்புடைய வாழ்வு வாழ்ந்தார். செப.தப. வேண்டுதல் களூடாக சோதனைகள். சவால்களை வெற்றிகொண்டு இறை ஒன்றிப்பின் வழியாக பணிவாழ்வுக்கு தயார்படுத்தப்பட்டு தூய ஆவியால் நிரப்பப்பட்டவராக மூன்றுவருட பகிரங்க பணி வாழ்வுக்கு புறப்பட்டார். தம்மைப்போல் பிறரையும் மீட்பின் பங்காளிகளாக இணையுமாறு அழைப்பு விடுத்தார். காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி விட்டது. மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள் (மாற் 1:15) என்று பறை சாற்றி வந்தார்.

இந்த வார்த்தைகள் அன்றுமட்டுமல்ல இன்றும் என்றும் மிகப் பொருத்தமானதாகும். எம்மைச்சூழ இடம்பெறும் நிகழ்வுகள், அவலங்கள், ஏக்கங்கள், அழுகுரல்கள் காலம் நிறைவேறி விட்டது என்பதை சுட்டி நிற்கிறது. வசதி , வாய்ப்புக்கள், செழிப்பு, மகிழ்ச்சியின் போது இறைவனை தொழ மறந்து நின்றவர்கள் கூட உம்மால்தான் எல்லாம் கூடும் என்று கை கூப்பி தொழும் நிலைக்கு மன மாற்றம் பெற வேண்டிய காலம் இதுவாகும். மனித வல்லமையால் முடியாதது இறையாட்சியில் தான் சாத்தியமாகும் என்பதை உணர்ந்து கொள்வோம்.

எனவே இதுவரை மனிதவழிகளை நம்பி தீய உலகப் போக்குகளில் வீழ்ந்து சாத்தானின் பிடியில் ஆன் மீகத்தை அழித்தது போதும். சுயநலமும் காழ்ப்புணர்வும், பொறாமையும், பகையுணர்வும்,எம் உள்ளத்தை உருக்குலைத் தது போதும். இதனால் மனிதம் சாகும். மன இறுக்கங்கள் கூடும். உறவுகள் உலரும். இறுதியில் என்னதான் மிஞ்சும். மன மாற்றம் தான் பதில் சொல்லும்.

தவக்காலத்தின் ஆரம்ப நாளில் நெற்றியில் புனித சாம்பலால் குருவானவர் சிலுவை வரைந்தவேளை உச்சரித்த மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள் என்பதை உள்ளத்தின் ஆழத்தில் சுமந் தவர்களாக இறை வார்த்தையில் வாழ்வை முன்னெடுப்போம். நிறைவாழ்வை பிறருடன் பகிர்ந்து கொள்வோம். திருமறைக்கு சாட்சியாகி சரித்திரம் படைப்போம்.

எஸ். யேசுதாஸ்

## திரை விமர்சனம்

**வி**கடன் நிறுவனம் சின்னத்திரையை விட்டு வெள்ளித்திரைக்கு வந்திருக்கிறது. எதுவும் பெரிய வித்தியாசங்கள் இல்லாத வழக்கமான காதல் கதை தான் என்றாலும் கொஞ்சம் சென்டிமெண்ட்டோடு கலகல காமெடியையும் இன்னும் சில கலர்ஃபுல் சமாச்சாரங்களையும் கலந்து கட்டி சிவா மனசுல சக்தி என்னும் படத்தை கொடுத்திருக்கிறார் அறிமுக இயக்குநர் ராஜேஷ்.

சிவா (ஜீவா) வேலை செய்தாலும் தண்ணி 'தம்'முன்னு சுத்திகிட்டு இருக்கிற லோக்கல் ஆள். சக்தி (அனுயா) எஃப். எம்மில் 'ஆர். ஜே' வாக வேலைசெய்யும் கொஞ்சம் 'ஹை க்ளாஸ் பார்ட்டி'. முதல் சந்திப்பில் மோதல் பின் காதலாகி விடுகிறது. சிவா மனசுல சக்தி இருக்கிறாள். சக்தி மனசுலயும் சிவா இருக்கிறான். ஆனால் இதை ஒருவருக்கொருவர் வெளிப்படுத்தும் ஒவ்வொரு நிகழ்வும் சண்டை சச்சரவுகளில் சென்று முடிகிறது. சிவா இறங்கி இறங்கி வரும்போது சக்தி ஒத்துவராததும், சக்தி இறங்கிவரும்போது சிவா ஒத்துவராததும் என கலாட்டாக்கள் நீண்டு கொண்டேபோகிறது. ஊதி ஊதி பெரிதாகிக் கொண்டிருக்கும் பலூனை குண்டூசி வைத்து உடைக்கிற மாதிரி ஒரு க்ளைமாக்ஸோடு முடிகிறது படம்.

ஜீவா, இயல்பான கலாய்ப்புகளோடு அசத்துகிறார். அட, இவன் நம்மாளு! என்று சொல்லும் அளவிற்கு நிறைவான நடிப்பு.






'ஹிப் ஆப்' நடனம் ஆடுகிறபோது இப்படி ஒரு ஜீவாவை இது வரைக்கும் பார்த்ததில்லையே என்றே தோன்றுகிறது. மேக்கப் முகத்தோடு வரும் புதுமுகம் அனுயா சில காட்சிகளுக்கு மட்டுமே பொருந்தி இருக்கிறார். மற்றபடி நடிப்பே வரவில்லை.

சந்தானம் சிரிக்க வைக்கிறார். தன் படபடப்பான பேச்சால் வாய்விட்டு சிரிக்க வைக்கும் ஊர்வசி, ஜீவாவிடம் அழும் காட்சியில் நெகிழவும் வைக்கிறார்.

கொஞ்ச நேரத்துக்கு வந்து போகும் ஆர்யா எதிர்பார்க்காத சஸ்பென்ஸ் என்றாலும், அலட்டல் இல்லாத அளவான நடிப்பு. சிவா சக்தியைப் பற்றி ஆர்யாவிடம் பேசும் காட்சியில்... சக்தி, உங்க குடும்பத்தோட சீக்கிரம் பேசி பழகிடுவா, முக்கியமாக உங்க அம்மாக்கிட்ட, ஏன்னா, அவளுக்கு அம்மா கிடையாது!

என்று சொல்லும்போது உண்மையிலேயே புல்லரிக்கிறது.

யுவன் ஷங்கர் ராஜாவின் பின்னணி இசை நச்! "ஒரு கல் ஒரு கண்ணாடி உடையாமல் உரசிக் கொண்டால் காதல்" பாடல் தம் அடிக்க வெளியே போகிறவர்களை இருக்கையில் அமர்த்தும்.

## காதலியை கரம்பிடிக்கிறார் ஜெயம் ரவி



நடிகர் ஜெயம் ரவி, தான் காதலித்த பெண்ணையே கரம் பிடிக்க இருக்கிறார். ஜெயம் படம் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமான ஜெயம் ரவி, தற்போது பேராண்மை படத்தில் நடித்து வருகிறார்.

இவர் ஒரு பெண்ணை காதலித்து வருவதாக அவ்வப்போது கிசுகிசுக்கள் கிளம் பின. ஆனால் அதனை மறுத்து வந்த ஜெயம் ரவி, இப்போது தனது காதலியையே கரம் பிடிக்கப் போகிறார்.

மணமகள் ஆர்த்தியும் ஜெயம் ரவியும் பல ஆண்டுகளாக காதலித்து வந்துள்ளனர். ஸ்கொட் லாந்தில் பிஸினஸ் மனேஜ் மெண்ட் படித்துள்ள ஆர்த்தி, தமிழ் பட அதிபர் விஜய குமாரின் மகள் என்பது குறிப்பிடத் தக்கது. இவர்களுக்கு திருமணம் நிச்சயிக்கப்பட் டுள்ளது. பேராண்மை பட சூட்டிங் முடிந்ததும் திருமண்ம் நடைபெறும் என்று தெரிகிறது.

## மீண்டும் தயாராகும் பாலைவனச்சோலை

1981 ஆம் ஆண்டு வெளிவந்த படம் 'பாலைவனச் சோலை' சுஹாசினி, ச ந்திரசேகர், ராஜீவ், ஜனகராஜ், தியாகு, கைலாஷ் ஆகியோர் நடித்து ரொபேர்ட் ராஜசேகர் இயக்கிய படம் இது. 28 வருடங்களுக்குப்பின் இப் படம் மீண்டும் தயாராகிறது.

சுஹாசினி நடித்த வேடத்தில் கார்த்திகா(திண்டுக்கல் சாரதி படத்தில் நடித்தவர்), சந்திரசேகர் நடித்த வேடத்தில் நிதின் சத்யா, ராஜிவ் நடித்த வேடத்தில் அபிநய், ஜனகராஜ் நடித்த வேடத்தில் புதுமுகம் சாம்ஸ், கைலாஷ் நடித்த வேடத்தில் புதுமுகம் சஞ்சீவ், தியாகு வேடத்தில் சத்யா ஆகியோர் நடிக்கி றார்கள். விட்டல் பிரசாத் முக்கிய வேடத்தில் நடிக்கிறார். திரைக்கதை, வசனம் எழுதி இயக்குகிறார் எஸ்.தயாளன். இவர் கே.எஸ்.ரவிக்குமாரிடம் உதவி இயக்குநராக இருந் தவர். இந்தப் படத்துக்காக வைரமுத்து 5 பாடல்கள் எழுதியிருக்கிறார். படப்பிடிப்பு தொடங்கி தொடர்ந்து நடைபெறுகிறது.

## ஏப்ரலில் யோகி




டைரக்டர் அமீர் ஹீரோவாக நடிக் கும் படம் யோகி. திருடா திருடி படத்தை இயக்கிய சுப்ரியமணியம் சிவா இயக்கத்தில் உரு வாகி வரும் இப்படம் தற்போது இறுதிக் கட்டத் தை எட்டியுள்ளது. கடந்த வாரம் சென்னை அண்ணா நகரில் விடிய விடிய படப்பிடிப்பு நடந் தது. அதனைத்தொடர்து டப்பிங் வேலை கள் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. ஏப்ரல் மாதம் யோகி திரைக்கு வரவுள்ளது.

## சூர்யா படத்தில் சரோஜாதேவி



உதயநிதி ஸ்டாலின் ரெட்ஜெயண்ட்பட நிறு வனம் சார்பில் தயாரிக் கும் அடுத்த படம் ஆத வன். இந்தப் படத்தின் நாயகனாக நடிகர் சூர்யா நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக நடிகை நயன்தாரா ஒப்பந்தமாகியுள்ளார். பிரண்ட்ஸ் படத்திற்கு பிறகு சூர்யா, வடிவேலு, ரமேஷ் கண்ணா ஆகியோர் சேர்ந்து நடிக்க வுள்ளனர்.

இந்தப் படத்திற்கு ரமேஷ் கண்ணா கதை எழுத, டைரக்டர் கே. எஸ். ரவிக்குமார் இயக்கு கிறார். இதில் இன் னொரு விசேஷம் என்னவென்றால், கன்னடத்து பைங்கிளி சரோஜாதேவி முக்கிய பாத்திரத்தில் நடிக்கிவிருக்கிறார்.

## திரை விமர்சனம்

## த.நா.07 அல 4777



**கா**தல் மனைவி சிம்ரனிடம் எல்.ஐ.சி.ஏஜென்ட் என சொல்லி விட்டு, கால் டாக்ஸி ஓட்டி கஷ்ட ஜீவனம் நடத்தும் பசுபதிக்கும், அப்பாவின் கோடிக்கணக்கான சொத்தைக் கைப்பற்றக் கடும் போராட்டம் நடத்தும் அஜ்மலுக்கும் இடையில் நடக்கும் ஏழை -பணக்கார ஈகோ மோதல்தான் த.நா.07 அல 4777 படத்தின் கதை!

ஏழை என்றாலே வெறுக்கும் கோடீஸ்வர வாரிசான அஜ்மல், தனது பென்ஸ் கார் சேர்வீஸுக்கு போனதால் ஏழை பசுபதியின் கால் டாக்ஸியில் (Call taxi) தனது முக்கியமான கேஷ் விஷயமாக நீதிமன்றம் போகிறார். ரொம்ப அவசரம் என்பதால் சிக்னலில் எல்லாம் நிறுத்தாமல் காரை வேகமாக ஓட்டச் சொல்கிறார். அதன் விளைவு ஓர் இடத்தில் கார் விபத்தைச் சந்திக்கிறது. டிரைவர் பகபதியோ பொலிஸ் கேஸ் என்று அலைய... விபத்திற்குக் காரணமாக அஜ்மல் அந்த இடத்தை விட்டு தப்பித்துக்கொள்கிறார். ஆனால் அஜ்மலின் சொத்துப் படிவங்கள் இருக்கும் லொக்கர் சாவி பசுபதி கைவசம் சிக்கிக் கொள்கிறது.எனவே பசுபதியின் உதவி அஜ்மலுக்கு தேவைப்படுகிறது. பசுபதியோ சாவியை தராமல் இழுத்தடிக்கிறார். கூடவே பொலிஸ் இருந்தும் சாவியைக் கொடுக்க மறுக்கிறார்.

இதனால் அஜ்மல், பசுபதியின் வீடு தேடிப் போகிறார். அதன் காரணமாக சிம்ரனுக்கு தன் கணவர் கால் டாக்ஸி டிரைவர் எனும் உண்மை தெரியவருகிறது. குடும்பத்தில் பூகம்பம். இதனால் அஜ்மல் மீது கடுப்பாகும் பசுபதி, அஜ்மலைத் தீர்த்துக் கட்டத் தயாராகி றார். இது தெரிந்து அஜ்மலும், அவர் காதலி மீனாட்சியும் பசுபதியிடம் இருந்து சாவியைக் கைப்பற்றி அதன் பின் அவரை தீர்த்துக் கட்ட திட்டம் போடுகிறார்கள். ஒரு கட்டத்தில் அஜ்மலுக்கு அவரது சொத்துக் கிடைக்காது எனத் தெரிந்ததும் மீனாட்சி அவரை விட்டுப் பிரிகிறார். பசுபதி பற்றி உண்மை தெரிந்ததும் சிம்ரனும் அவரை விட்டு விலக நினைக் கிறார். இப்படியாக விறுவிறுப்பாக போகும் கதையின் இறுதியில் யார் வென்றது? என்ற கேள்விக்கு பதில்தான் க்ளைமாக்ஸ்!


இந்தியில் டாக்ஸி எனும் பெயரில் வெற்றி பெற்ற படத்தின் தமிழ் தழுவல்தான் 4777 படம்.

ஆர்.வி.குருதேவன் ஒளிப்பதிவும், விஜய் ஆண்டனியின் இசையும் படத்திற்கு பலம்!

த.நா.07. அல 4777 மறைந்த முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆரின் கார் நம்பர். அந்த நம்பரை உடைய காரை ஒரு சில காட்சியில் அடித்து நொறுக்கி தூக்கி வீசுவது, கதைக்காகத்தான் என்றாலும், இயக்குநர் லட்சுமிகாந்தன் நினைத்திருந்தால், பசுபதியின் குடும்பத்தை அஜ்மல் மீட்டுத் தருவது போன்றே, அவரது காரையும் மீண்டும் தயார்செய்து கடைசிக் காட்சியில் கைதட்டல் பெற்றிருக்கலாம். இதுமாதிரி இன்னும் சில பல குறைகளால் இந்த டாக்ஸி எல்லோரும் விரும்பும் டாக்ஸியாக இல்லாமல் போனது வருத்தம். **நா.07 அல:4777: சீரான பயணம்**

# யாழ். மத்திய கல்லூரி 222 ஓட்டங்களால் வென்று தொடர்ச்சியாக மூன்றாவது முறை கிண்ணத்தை சுவீகரித்தது

## ஆட்டநாயகனானார் அணித்தலைவர் செல்ரன்






வடக்கின் பெரும் போரில் யாழ்.மத்திய கல்லூரி அணி 222 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று தொடர்ச்சியாக மூன்றாவது வருடமாக கிண்ணத்தை சுவீகரித்தது.

இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 184 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

வடக்கின் பெரும் போர் என வர்ணிக்கப்படும் யாழ்.மத்திய கல்லூரிக்கும்,யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 103 ஆவது மூன்று நாள் இன்னிங்ஸ் கிரிக்கெட் போட்டி கடந்த 26ஆம் திகதி யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 236 ஓட்டங்களை எடுத்தது.

பதிலுக்கு தனது முதலாவ்வது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 105 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதன் மூலம் முதலாவது இன்னிங்ஸில் 131 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையில் இருந்த யாழ்.மத்திய கல்லூரி அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி 8 விக்கெட்டுக்களையிழந்து 274 ஓட்டங்களை குவித்து ஆட்டத்தை இடை நிறுத்தியது.

இதனடிப்படையில் வெற்றி இலக்காக 406 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்குடன் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி நேற்றுமுன்தினம் முதல்நாள் ஆட்டநேர முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் மூன்றாவதும் இறுதிநாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத் தாடிய யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மேலதிகமாக 50 ஓட்டங்களை மாத்திரமெடுத்து மீதம் 5 விக்கெட்டுக்களையும் இழந்தது.

இறுதியில் யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி இரண்டாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 184 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 222 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் எம்.ஹரிப்பிரவீன் 75 ஓட்டங்களையும் எ.விதுஷன் 19,எஸ்.பிரியதர்ஷன் 17, அணித்தலைவர் வி.பிரணவன் 16 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஜி.ஜெரிக்துஷாந் 20 ஓவர்கள் பந்துவீசி 5 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 28 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் ஆர்.கோபிகன்,எஸ்.அலன்குமார், எஸ்.தனுஜன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் சாய்த்தனர்.

இவ்வெற்றியின் மூலம் யாழ்.மத்திய கல்லூரி அணி தொடர்ந்து மூன்றாவது வருடமாக கிண்ணத்தை சுவீகரித்தது.

**விருது வென்றவர்கள்**

இப் போட்டியில் இரண்டு இன்னிங்ஸிலும் 151 ஓட்டங்களை எடுத்து யாழ்.மத்திய கல்லூரியின் வெற்றிக்கு வழியமைத்த அணித்தலைவர் கே.செல்ரன் தெரிவானதுடன், சிறந்த துடுப்பாட்ட வீரர் விருதையும் பெற்றார்.

இப் போட்டியின் சிறந்த ஆட்டக்காரராக யாழ். மத்திய கல்லூரி அணியின் சகலதுறை ஆட்டக்காரர் ஜே.ரதீஸன் தெரிவானார்.

சிறந்த . பந்துவீச்சாளராக யாழ்.சென். ஜோன்ஸ் கல்லூரி அணியின் எஸ்.பிரியதர்சன் தெரிவானதுடன் சிறந்த களத்தடுப்பாளர் விருதை சென்.ஜோன்ஸ்கல்லூரி அணித்தலைவர் வி.பிரணவன் பெற்றார்.

# பொன் அணிகள் போர் சமனிலையில் முடிவு

## இரண்டாவது இன்னிங்ஸிலும் நிகேதன் அரைச்சதம்





(வட்டுக்கோட்டை)

பொன் அணிகள் போர் மூன்று இன்னிங்ஸுகள் மட்டுமே விளையாடிய நிலையில் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

பொன் அணிகள் போர் என வர்ணிக்கப்படும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 92ஆவது வருட இரண்டு நாள் இன்னிங்ஸ் கிரிக்கெட் போட்டி யாழ்ப்பாணக் கல்லூரி பிக்னல் மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணித்தலைவர் எம்.ஏ.நிலோசன் முதலில் களத்தடுப்பைத் தீர்மர்னித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக்கல்லூரி அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட் டுக்களையும் இழந்து 172 ஓட்டங்களை எடுத்தது.

இதில் துணை அணித்தலைவர் ஜே.நிகேதன் 88 ஓட்டங்களையும் அணித்தலைவர் எஸ்.நிரோசன் 35 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அணித்தலைவர் எம்.ஏ.நிலோசன் 4 விக்கெட்டுக்களையும் எம்.டி.சஜீந்திரன், பி.மைக்கல் மற்றும் பி.நவதீபன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி நேற்று முன்தினம் முதல்நாள் ஆட்டநேர முடிபில் 4 விக்கெட்டுக்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் இரண்டாவதும் இறுதி நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி, மைக்கல்,நவதீபனின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 258 ஓட்டங்களை எடுத்து 86 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது.

இதில் பி.என்.நவதீபன் 61 பந்துகளில் (3 பவுண்டரிகள்,ஒரு சிக்ஸர் அடங்கலாக) 48 ஓட்டங்களையும் மைக்கல் 101 பந்துகளில் (6 பவுண்டரிகள் அடங்கலாக) 47 ஓட்டங்களையும் எம்.வி.ஹமில்ரன் 39 ஓட்டங்களையும் எ.கவாஸ்கர் ஆட்டமிழக்காமல் 29 பந்துகளில் (2 பவுண்டரிகள்,ஒரு சிக்ஸர் அடங்கலாக) 33 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் வி.கஜநாதன் 24 ஓவர்கள் பந்துவீசி 4 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 69 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் வி.ஜோயல் செகான் 20.4 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 39 ஓட்டங்களையும் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் ஜே.நிகேதன் 2 விக்கெட்டுக்களையும் மற்றும் பி.சிறிகுகன்,பி.துஷியந்தன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 86 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையில் இருந்த யாழ்ப்பாணக் கல்லூரி அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்றைய இறுதிநாள் ஆட்ட நேர முடிபில் 4 விக்கெட்டுக்கள் மாத்திரம் இழந்து 161 ஓட்டங்களை எடுத்தது.

இதனால் ஆட்டம் மூன்று இன்னிங்ஸுகளே விளையாடியநிலையில் வெற்றிதோல்வியின்றி நிறைவடைந்தது.

இதில் துணை அணித்தலைவர் ஜே.நிகேதன் 100 பந்துகளில் (8 பவுண்டரிகள் அடங்கலாக) 62 ஓட்டங்களையும் கே.பிரசோபனன் ஆட்டமிழக்காமல் 139 பந்துகளில் (2 பவுண்டரிகள் அடங்கலாக) 32 ஓட்டங்களையும் அணித்தலைவர் எஸ்.நிரோசன் 29 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அணித்தலைவர் எம்.ஏ.நிலோசன் 10 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 14 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் எஸ்.மிலாண்டோ, எல்.கஜமுகன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதன் மூலம் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாகவும் பொன் அணிகள் போர் சமனிலையானது.

**விருது வென்றவர்கள்**


இப் போட்டியில் இரு இன்னிங்ஸிலும் சேர்த்து 150 ஓட்டங்களை எடுத்ததுடன் பந்து வீச்சில் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தி ஜொலித்த யாழ்ப்பாணக் கல்லூரி அணியின் ஜே.நிகேதன் ஆட்டநாயகனாகத் தெரிவானதுடன் சிறந்த துடுப்பாட்ட வீரர் விருதை யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியின் பி.நவதீபனுடன் இணைந்து பெற்றார்.

சிறந்த பந்துவீச்சாளர் விருதை யாழ்.சென். பற்றிக்ஸ்கல்லூரி அணித்தலைவர் எம்.எ.நிலோசன் யாழ்ப்பாணக் கல்லூரி அணியின் வி.ஜோயல் செகானுடன் இணைந்து தெரிவானார்.

சிறந்த சகல துறை வீரராக யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி வீரர் பி.மைக்கலும் சிறந்த களத்தடுப்பாளராக யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியின் எஸ்.மிலோன்டோவும் தெரிவானார். அத்துடன் சிறப்பான இணைப்பாட்டத்திற்கான விருதை யாழ்ப்பாணக் கல்லூரி வீரர்களான ஜே.நிகேதன் மற்றும் எஸ்.நிரோசன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

விசேட விருதுகளை யாழ்ப்பாணக் கல்லூரி அணியின் வி.கஜநாதனும், யாழ்.சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியின் ஏ.கவாஸ்கரும் பெற்றனர்.

இதேவேளை இப்பருவ கால பாடசாலை அணிகளுக்கிடையிலான 8 போட்டிகளில் யாழ்ப்பாணக்கல்லூரி அணி 4 போட்டிகளில் வெற்றியும் 4போட்டிகளில் சமனிலையிலும் உள்ளது.



உலக உணவுத்திட்ட நிவாரணம் பெறுவதற்கு காத்திருக்கும் மக்கள்.



இடம்பெயர்ந்து மக்கள் வாழும் கூடாரங்களில் ஒரு பகுதி.

# வவு. பூந்தோட்டம் முகாமில் தீ விபத்து, 7 குடிசைகள் தீக்கிரை

(கொழும்பு)

பல வருடங்களுக்கு முன்னர் இடம் பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த வவுனியா பூந்தோட்ட முகாமில் ஏற்பட்ட தீ விபத்தில் 7 குடிசைக்ள் எரிந்து சாம்பலாகின.

இந்த முகாமில் 48 குடும்பங்கள் தங்கியிருந்ததாகவும் அனர்த்த நிவாரண சேவைகள் மற்றும் மீள் குடியேற்ற அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

தீயினால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த தீவிபத்துக்கான காரணம் இது வரை கண்டறியவில்லை. இதேவேளை இம் முகாமில் ஏற்கனவே இரு தடவைகள் தீ விபத்துக்கள் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-3,5)

# 6ஆம் கட்டமாக 252 நோயாளர்கள் திருமலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்

(திருகோணமலை)

முல்லைத்தீவு,புதுமாத்தளன் பகுதியிலிருந்து 6-வது தொகுதி நோயாளர்கள் நேற்று திருகோணமலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்கள்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் இடம் பெற்றுவரும் இந்த மனிதாபிமான கப்பல் சேவை நடவடிக்கையின் மூலம் நோயாளர்கள், காயங்களிற்கு இலக்கானோர், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் அவர்களின் உதவியாளர்கள் என 252 பேர் கிறீன் ஓசியானிக் கப்பல் மூலம் நேற்று மாலை திருகோணமலைக்கு கொண்டு செல்லப்பட்டனர் என திருகோணமலை மருத்துவ பணிகளின் இணைப்பாளர் மருத்துவர் ஞானகுணாளன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை திருகோணமலை அரசினர் பொது மருத்துவமனையில் சிகிச்சை வழங்கப்பட்ட நூறு பேர் பேருந்து மூலம் வவுனியாவிலுள்ள இடைத்தங்கல் முகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த நூறு பேருடன் சேர்த்து மொத்தமாக 746 பேர் திருகோணமலை மருத்துவமனையிலிருந்து வவுனியா இடைத்தங்கல் முகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை அரசினர் வைத்திய சாலைக்கு தொடர்ந்து நோயாளிகள் கொண்டுவரப்படுவதால் இடநெருக்கடியைத் தவிர்க்கும் முகமாக ஓரளவு சிகிச்சை வழங்கப்பட்ட நோயாளர்களை மன்னர் அரச வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்றுவருவதாக் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சிகிச்சை வழங்கப்பட்ட 430 பேர் மன்னர் வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள் என திருகோணமலை வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ந-5,14)

# தேசிய பாதுகாப்பு சட்டத்தில் இயக்குநர் சீமானுக்கு சிறை

இயக்குநர் சீமான் இந்திய இறையாண்மைக்கு எதிராக செயற்பட்டதாக அவரை தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்க தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஈழத்தமிழருக்கு ஆதரவாக புதுச்சேரியில் சட்டக் கல்லூரி மாணவர்கள் உண்ணாவிரதம் இருந்தனர்.

இந்த உண்ணாவிரதத்தில் மாணவர்களை வாழ்த்திப் பேசவந்த இயக்குநர் சீமான் இந்திய இறையாண்மைக்கு எதிராக பேசியதாக புதுச்சேரி பொலிஸ் அவர் மீது வழக்குத் தொடர்ந்தது. இதனையடுத்து தமிழக அரசின் உத்தரவுக்கு அமைய தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சீமான் சிறையில் அடைக்கப்படுவதால் அவருக்கு ஒரு வருடத்திற்கு வெளியே வரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (ந-5)

## பட்டினிச் சாவும்...

அறிக்கைகளை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

கடந்த நான்கு நாட்களில் உயிரிழந்த 18 பேர் தொடர்பாக நடந்த மருத்துவ விசாரணைகளில் இவர்களின் மரணத்திற்கு போதிய உணவின்மை, ஊட்டமின்மை மற்றும் நோய் எதிர்ப்புத் தன்மை இழப்பு ஆகியவையே காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விதம் இறந்தவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**முள்ளிவாய்க்கால் பகுதியில்**

கனகசபை பிரவீணன் (வயது 12), சிவராசா கண்ணன் (வயது 38).

**புதுக்குடியிருப்பு இரணைப்பாலையில்**

சிவநேசன் சுலக்சன் (வயது 12), மகேஸ்கரன் கர்ணன் (வயது 15), கருணாகரன் பிருந்தா (வயது 17), கந்தைஞானி மனோகரன் (வயது 32).

**மாத்தளன் பகுதியில்**

சபேசன் சிந்து (வயது ஒன்றரை), பால்ச்சந்திரன் சிவரூபன் (வயது 13), மகிந்தன் விநோதா (வயது 48), தேவராசா கஜேந்திரன் (வயது 36), திருச்செல்வம் சிவகணேசன் (வயது 42).

**அம்பலவன்பொக்கணை, இடைக்காடு பகுதியில்**

சிவராசா சக்திகணேசன் (வயது 3), மலர்வேந்தன் மகிழன் (வயது 12), யோகராசா ரவி (வயது 18).

**வலைஞர்மடம் பகுதியில்**

அனித்கிப்சன் (வயது 14), பரமநாதன் புவியரசன் (வயது 17), சிவகடாட்சம் றமணன் (வயது 23), சிவகடாட்சம் கார்த்திகாயினி (வயது 14). (ந-5)

## புலிகளின்...

புலிகளின் தாக்குதல்களுக்கு பதிலடி கொடுத்து முன் னேறிச் சென்றவேளை புலிகள் இவற்றை கைவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது. (ந-5)

## கனகரத்தினம் எம்.பி...

என்பவராவார்.

இக்கடத்தல் தொடர்பாக ஆசிரியையாகிய அவரது மனைவி தெரிவிக்கையில், எனது கணவர் வீட்டிலிருந்த சமயம் பெண் உட்பட 10 பேர் கொண்ட ஆயுதக் குழுவினர் வந்து விசாரணைக்காக கூட்டிச் செல்வதாகவும் விசாரணை முடிந்தபின் விடுதலை செய்வதாகவும் கூறி வெள்ளைவானில் கடத்திச் சென்றனர் என்றார்.

இதேவேளை இவரது கடத்தல் தொடர்பாக நேற்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வவுனியா பொலிஸாரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது தாங்கள் குறித்த எம்.பியின் செயலாளரை கடத்தவோ அல்லது கைது செய்யவோ இல்லை என்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## தென் பகுதியில் எந்நேரமும்...

தாக்குதல்களை நடத்த விடுதலைப் புலிகள் முயற்சிக்கலாம் என்பதால் பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டுமென ஊடகத்துறை அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபயவர்த்தன கோரிக்கை விடுத்தார்.

இரண்டு விமானங்களைப் பயன்படுத்தி தற்கொலைத் தாக்குதல் நடத்த முயற்சித்த விடுதலைப் புலிகளின் தலைமைத்துவம் தற்பொழுது நம்பிக்கை இழந்திருப்பதாக அமைச்சர் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கூறினார்.

அரசாங்கத்தின் மனிதநேய நடவடிக்கைகள் முடியும் தறுவாயில் இருப்பதாகக் குறிப்பிட்ட அமைச்சர் தென்பகுதியில் விடுதலைப் புலிகள் தாக்குதல்களை நடத்த முயற்சிக்கக் கூடும் என்பதால் மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

அதேநேரம், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஒருவரைக் கைது செய்வதற்கு பொலிஸார் ஜீப் வண்டியில் மாத்திரம் வரவேண்டிய அவசியம் இல்லையெனத் தெரிவித்த அவர், தாம் விரும்பிய எந்த வாகனத்திலும் அவர்கள் வரமுடியும் எனக் கூறினார். (ந-5)

## ஆயிரக்கணக்கான மக்கள்...

விவகாரங்களுக்கான செயலாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸ், ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை உறுப்பினர்களிடம் கூறினார்.

இலங்கை அரசாங்கப் படைகளுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல்களால் அபாயமான சூழ்நிலை காணப்படுகிறது. பொதுமக்கள் வெளியேறாது விடுதலைப்புலிகள் தடுக்கின்றமைக்கான ஆதாரங்கள் உள்ளன என அவர் தெரிவித்தார்.

பொதுமக்களை விடுவிக்குமாறு அழுத்தம் கொடுக்க விடுதலைப்புலிகள் மத்தியில் செல்வாக்குள்ள அனைத்துத் தரப்பினரிடமும் தான் கோரிக்கை விடுத்ததாக ஹோம்ஸ் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் கூறினார்.

இராணுவ நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்போது பொதுமக்கள் பாதுகாப்பாக வெளியேறுவதற்கு நேரம் வழங்கப்பட வேண்டும் என எனது இலங்கை விஜயத்தில் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளேன்.

இதேவேளை இலங்கையில் மோதல்களில் ஈடுபட்டிருக்கும் இரண்டு தரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபைக்கான பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் தூதுவர்கள் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் வலியுறுத்தியிருந்தனர்.

அதிகாரத்திலிருப்பவர்கள் பொதுமக்களை பாதுகாத்து மனித உரிமைகளை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபைக்கான பிரான்ஸ் தூதுவர் ஜேன் மௌரிஸ் ரிப்பெர்ட் கோரிக்கை விடுத்தார்.

இலங்கையின் நிலைவரம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் கலந்துரையாடப்பட்டுள்ளது. (ந-3,5,14)

## புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பை...

இதுதொடர்பாக இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் நேற்று அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் ஒவ்வொருநாளும் அதிகரித்துவரும் மனிதாபிமான நெருக்கடி குறித்து இந்தியா கவலைகொண்டுள்ளது. போர்ப் பிரதேசத்தில் 70ஆயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் சிக்கியிருப்பதாகவும் உணவு, தண்ணீர், மருந்துகளுக்குப் பெரும்பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ள அதேநேரம் பல அப்பாவி உயிர்கள் நாள்தோறும் பலியாகியுள்ளன.

பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களிற்கு செல்ல அனுமதிப்பது குறித்தும் அவர்களது பாதுகாப்பை உறுதிசெய்வது குறித்தும் இந்தியா தொடர்ந்து தனது கவலையை வெளிப்படுத்திவருகிறது.

விடுதலைப்புலிகள் போர் நிறுத்தம் செய்ய தயாராக இருப்பதாக வெளியாகியுள்ள செய்திகளை சுட்டிக்காட்டியுள்ள பிரணாப் முகர்ஜி அவர்கள் ஆயுதங்களை கீழே போட தயாராக இல்லையென்பதை உணர்த்தினாலும் கூட இலங்கை அரசு இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு போரை இடைநிறுத்தம்செய்யவேண்டும் என்பதே இந்தியாவின் கருத்து என்று வலியுறுத்தியுள்ளார்.

போர்ப்பிரதேசங்களில் சிக்கியுள்ள பொதுமக்களை பாதுகாப்பான இடங்களிற்கு மீட்டுக்கொண்டுவருவது குறித்த நடைமுறைகளை இலங்கை அரசு உடனடியாக வகுக்க வேண்டுமென்று இந்தியா கோரிக்கை விடுப்பதாகவும் பிரணாப்முகர்ஜி வலியுறுத்தியுள்ளார்.

அந்த ஏற்பாட்டிற்கு விடுதலைப்புலிகளின் ஒத்துழைப்பு அவசியமென்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மோதல் நிறுத்தப்படும் சூழ்நிலையைப் பயன்படுத்தி போர்ப்பகுதிகளிலுள்ள பொதுமக்களை மறுவாழ்வுக்கு உகந்த பகுதிகளிற்கு கொண்டுவரவேண்டும். அங்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உள்ளிட்ட சர்வதேச உதவி அமைப்புக்கள் பணியாற்றவும் மருத்துவம் மற்றும் பிற மனிதாபிமான உதவிகள் வழங்குவதற்கும் தடையற்ற அனுமதி வழங்கப்படவேண்டுமென்றும் இந்தியா வலியுறுத்தியுள்ளது.

இலங்கையின் வடபகுதியில் இடம்பெயர்ந்த மக்களிற்கு அவசர மருத்துவக் குழுக்களையும் மருந்துகளையும் அனுப்புவதற்கு இந்தியா ஏற்பாடுசெய்துவருவதாகவும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

அடுத்த கட்டமாக மாகாணங்களிற்கு அதிகாரத்தை முறையாகப் பகிர்ந்தளிக்கும் திட்டத்தை செயல்படுத்தவேண்டும். அப்போது ஒன்றுபட்ட இலங்கைக்குள் அதன் அரசியல் சட்டத்தின் அடிப்படையில் அனைத்து மக்களிற்கும் குறிப்பாக தமிழ் மக்களிற்கு சம உரிமை வழங்குவதற்கு உத்தரவாதம் வழங்கப்படவேண்டுமென்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் உள்ள அனைத்துத்தரப்பு மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு வெளியிடப்பட்ட இந்த உண்மையான கோரிக்கைக்கு இலங்கை அரசும் சம்பந்தப்பட்ட மற்ற தரப்பினரும் செவிமடுப்பார்கள் என நம்புவதாகவும் இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி வெளியிட்டுள்ள அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-14)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.03.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.